# அன்பு பகிர்வு இயக்கம்

Shalom

# செய்தி மலர்

| | |
|---|---|
| தனிப்பிரதி | ₹. 10/- |
| ஆண்டுச் சந்தா | ₹. 100/- |
| ஆயுள் சந்தா | ₹. 1000/- |

மலர் : 13 இதழ் : 02 டிசம்பர் 2016

பீல் ஆதிவாசி மக்கள் தரிசன பணியில்

ஷாலோம் 25 YEARS வெள்ளி விழா ஆண்டு

## தேவன்

அருளிய
சொல்லிமுடியாத
ஈவுக்காக (இயேசு கிறிஸ்து)
அவருக்கு
ஸ்தோத்திரம்

2 கொரிந்தியர். 9:15

ஆசிரியர்.
பேராயர் வே. தேவதாஸ்



# உங்கள் சகோதரனிடமிருந்து...

உலக இரட்சகராம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்.

தேவ கிருபையினாலும் உங்கள் யாவரின் ஜெபங்களினாலும் பீல் மக்கள் மத்தியில் ஊழியங்கள் விரைந்து நடைபெற்று வருகிறது. தேவன் தாமே 2016 ஆம் ஆண்டு முடிவில் நம்மை நடத்தி இந்த கடைசி டிசம்பர் மாதத்தை காணச் செய்த கிருபைக்காக தேவனைத் துதிப்போம்

வருடத்தின் இறுதி மாதமான இந்த டிசம்பர் மாதம் உலகின் அனைவருக்கும் சந்தோஷமும் ஆனந்தமும் மிகுந்த மாதமாகும். கிறிஸ்துவின் பிறப்பை உலகில் அனைவரும் நினைத்து துதித்து கொண்டாடும் மாதம் மட்டுமல்ல கிறிஸ்துவின் முதல் வருகையின் நற்செய்தியை அதி சீக்கிரமாக கட்டாயமாக அனைவருக்கும் அறிவிக்கும்படியாக அழைக்கப்பட்டுள்ளோம்.

கடந்த அக்டோபர் மாதம் 18 முதல் 25 தேதி வரை நம் ஷாலோம் பீல் சுதேச ஊழியர்களின் குடும்ப முகாம் மற்றும் அன்பு சகோ.மோகன் சி.லாசரஸ் அவர்கள் பணித்தளத்திற்கு வந்து சிறப்பு ஊழியங்களை நடத்தி தந்தார்கள். சிறப்பு அறிக்கையை அடுத்தமாத இதழில் வாசித்து தேவனைத் துதியுங்கள். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

இந்த பண்டிகையின் மனமகிழ்ச்சி மாதத்தில் நம் ஷாலோம் ஊழியர்கள், அலுவலக மற்றும் Project ஊழியர்களாக 710 குடும்பங்களுக்கு கிறிஸ்துமஸ் வெகுமதியாக துணிமணிகளும் குறிப்பாக சுமார் 3500க்கும் அதிகமான பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்கு துணிமணிகளும் வெகுமதியாக வழங்க வேண்டும் மற்றும் சிறப்பு கிறிஸ்துமஸ் நற்செய்தி அறிவிப்பு கூட்டங்களும் நடத்தப்பட வேண்டும். இதற்கான தேவைகள் ரூ.20 இலட்சங்கள் சந்திக்கப்பட ஜெபிக்கவும், உங்களால் முடிந்த நிதிஉதவியை அனுப்பி ஊழியங்களை தாங்க ஊழியர்களை உற்சாகப்படுத்த அன்புடன் வேண்டுகிறேன்.

தேவன் தாமே 2016 ம் ஆண்டு முழுவதும் எங்களை நேசித்து, ஜெபித்து ஷாலோம் பரம தரிசனபணியான பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் நடைபெறும் ஊழியங்களை தாங்கி வருகிற உங்கள் யாவரையும் கர்த்தர் தாமே ஆசீர்வதிப்பாராக!

சமாதான பிரபுவாம் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் எங்கள் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்.

**தேவ அறுவடை பணியில் உங்கள்**
**அன்பு சகோதரன்,**

**(பேராயர்.V. தேவதாஸ்)**

*Wish You a Happy Christmas*

என்னுடன் தொடர்பு கொள்ள
**09377445468**

# உன்னதத்திலிருந்து தோன்றிய அருணோதயம்

சிறப்பு செய்தி : *பேராயர்* **வே. தேவதாஸ்**

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள்.

இயேசு கிறிஸ்துவின் பிறப்பு கிறிஸ்தவர்களுக்கு மட்டுமல்லாமல், இந்த உலகத்தில் வாழும் ஒவ்வொரு மனிதருக்கும் தேவன் கொடுத்த விலையேறப் பெற்ற ஈவாக, பரிசாக தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை அனுப்பி இவ்வளவாய் அன்பு கூர்ந்த மாபெரும் மகிழ்ச்சியாகும். லூக்கா 1:78,79 வாசித்து பாருங்கள். சகரியா பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு தீர்க்கதரிசனமாக பாடின பாடலில் அந்தகாரத்திலும், மரண இருளிலும் உட்கார்ந்திருக்கிறவர்களுக்கு வெளிச்சத்தை தரும்படியாக இயேசு உலகத்தில் வந்தார். நம்முடைய கால்களைச் சமாதானத்தின் வழியிலே நடத்த சமாதான பிரபுவாக வந்தார்.

மனிதன் தேவனை விட்டு விலகி ஓடுவதினால் பாவம் செய்கிறான், அதன் விளைவாக அவன் வாழ்வில் அந்தகாரம் உண்டாகிறது, மரண இருளில் உட்கார்ந்து நித்திய ஜீவனுக்கேற்ற நம்பிக்கை அற்ற வாழ்வாக மாறுகிறது. தேவன் அன்பாக இருக்கிறபடியால் உலகிற்கு ஒளியாக தம் குமாரனாகிய இயேசுவை அனுப்பினார். யோவான் 1:9 சொல்லுகிறது உலகத்தில் வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி. உலகத்தில் எந்த மனுஷரையும் எந்த ஜாதியாக இருந்தாலும், எந்த நாட்டினராக இருந்தாலும், எந்த பாஷைக்காரராக இருந்தாலும், எப்படிப்பட்ட பாவியாக இருந்தாலும் மரண இருளை நீக்கவே, அவனை பிரகாசிப்பிக்கிற ஒளியாக இயேசு வந்தார்.

விஞ்ஞானம் அறிவு பெருத்துப்போன உலகில் கல்வி, பணம், அந்தஸ்து, ஆடம்பரங்கள் எல்லாம் பெருகி வருகின்றன. ஆனால் தனிப்பட்ட மனிதனுக்கு சமாதானம் இல்லை. எல்லாவற்றையும் சம்பாதிக்க, உருவாக்க, ஆள முடிகிறது. ஆனால் மனிதனுக்கு உள்ளத்தில் சமாதானம் இல்லை. குடும்பங்களில் தெய்வ சமாதானம் இல்லை. தேசங்களில் சமாதான் இல்லாதபடியால் உலகமே மரணபயத்தில் அமிழ்ந்துள்ளது. ஆனால் உலகம் தரக்கூடாத சமாதானத்தை தரும்படியாக சமாதானப் பிரபுவாக இயேசு உலகத்தில் வந்தார். லூக்கா 1:79ன் இவ்விரக்கத்தினாலே நம்முடைய கால்கள் சமாதானத்தின் வழியிலே நடத்த இயேசு உலகத்திற்கு வந்தார். அவர் பிறப்பினாலே பூமியில் சமாதானம் உண்டானது.

**தனிப்பட்ட வாழ்வில் கிறிஸ்துமஸ் அனுபவம்** :

கிறிஸ்துமஸ் பண்டிகையாக ஆசரிப்பதால் கிடைப்பது மகிழ்ச்சியல்ல. ஒவ்வொரு மனிதனும் சந்தோஷத்தை அனுபவித்து மகிழ வேண்டும். ‘‘சத்திரத்தில் இடமில்லை இயேசு பாலகன் பிறப்பதற்’’ என்று காண்கிறாம். பெத்லேகேமில் எத்தனை வீடுகள், சத்திரங்கள் இருந்தாலும், அவர் பிறப்பதற்கு இடமில்லை. இன்று மெய்யான கிறிஸ்துமஸ் சந்தோஷத்தைப் பெற்று அனுபவிக்க வேண்டுமானால் உன் சத்திரமாகிய இதயத்தின் வாசலைத் திறப்பாயா? உன் உள்ளத்தில் இயேசு பிறந்து விட்டால் எத்தனை சந்தோஷம். நீங்கள் சிறுவனாக இருக்கலாம், வாலிபனாக இருக்கலாம், முதிர் வயதுள்ளவராக இருக்கலாம் ஆனால் இயேசு இரட்சகர்

உங்கள் உள்ளத்தில் பிறந்தால் தானே மெய்யான சந்தோஷம் உண்டாகும்!

இயேசுவின் பிறப்பை சாஸ்திரிகள் தேவனால் உண்டாக்கப்பட்ட அந்த நட்சத்திரத்தினால் அறிந்து கொண்டார்கள். வயல் வெளியில் மந்தைகளை மேய்த்துக் கொண்டிருந்த மேய்ப்பர்கள் பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட தேவ தூதர்களால் அறிந்து கொண்டார்கள். அறிந்து கொண்ட சாஸ்திரிகளும், மேய்ப்பர்களும் அப்படியே இருந்து விடவில்லை.

பெத்லேகேமிற்குச் சென்று அறிவிக்கப்பட்ட செய்தியை கண்களால் கண்டு இயேசு பாலகனை தரிசித்து தொழுது கொண்டார்கள். நமக்கு இந்த அனுபவம் உண்டா? கிறிஸ்துவின் பிறப்பின் செய்தியை வருடா வருடமாக பாரம்பரியமாக கேட்டுக் கொண்டிருக்கிறோமா? அவரை சொந்த இரட்சகராக தொழுது கொண்டிருக்கிறோமா? கர்த்தரை தெய்வமாக கொண்டுள்ள ஜனம் பாக்கியமுள்ளது அல்லவா? தனிப்பட்ட நம் வாழ்வில் இயேசு பிறந்த அனுபவம், அவரை தரிசித்து தொழுது இரட்சிப்பின் சந்தோஷத்தையே பிரதானமாக நாம் பெற்றுக் கொள்வதுதானே?

**கிறிஸ்துமஸ் மகிழ்ச்சி பகிர்ந்து கொள்ளும் மகிழ்ச்சி :**

கிறிஸ்தவரான நமக்கு மட்டுமல்ல இந்த நற்செய்தி எல்லா ஜனத்திற்கு சொந்தமான நற்செய்தி.



**தூதர்கள் அறிவித்தார்கள் :**

இயேசு கிறிஸ்து பிறந்த போது தேவ தூதர்கள் பரலோகத்தில் மட்டும் மகிழ்ந்து களிகூறவில்லை, துதித்துப் பாடி கொண்டாடவில்லை, அவர்கள் பூலோகத்தில் இறங்கி வந்து நற்செய்தியை அறிவித்தார்கள்.

**மேய்ப்பர்கள் பிரசித்தம் செய்தார்கள் :**

தேவதூதர்களால் கூறப்பட்ட நற்செய்தியை கண்டு தரிசிக்க பெத்லேகேமிற்கு மேய்ப்பர்கள் விரைந்து சென்றார்கள். இயேசு பாலகனை கண்டு ஆனந்தமடைந்தார்கள். அது மட்டுமல்ல லூக்கா 2:17ல் வாசிக்கிறோம். கண்டு, அந்த பிள்ளையைக் குறித்து (இயேசுவைக் குறித்து) தங்களுக்கு சொல்லப்பட்ட சங்கதியை (நற்செய்தியை) பிரசித்தம் பண்ணினார்கள். தங்களுக்கு கிடைத்த நற்செய்தியை தாங்களே வைத்துக் கொள்ளாமல் இது "எல்லா ஜனத்திற்கும்" என்ற தேவதூதனின் செய்தியை சரியாக புரிந்துக் கொண்டு பிரசித்தம் பண்ணினார்கள்.



நாமும் நம் மூதாதையர்களுக்கு மிஷனெரிமார்கள் மூலமாய் கிடைத்த இந்த நற்செய்தியை எங்கும் பிரசித்தம் செய்ய தேவன் அழைக்கிறார். நாம் மட்டும் பண்டிகையை ஆசரித்து மகிழ அல்ல, இயேசுவின் நற்செய்தியை எங்கும் பிரசித்தம் செய்ய வேண்டும்.

பீல் ஆதிவாசி விசுவாசிகள் ஒவ்வொரு வருடமும் கிறிஸ்துமஸ் மனமகிழ்ச்சியின் நாட்களில் சபையார் மட்டுமல்ல முழுக்கிராம மக்களை ஆராதனையில் பங்கு பெற

அழைப்பார்கள். அவர்கள் தோஷத்தையும் சாட்சிகளையும் அநேகர் கேட்பார்கள். ஆராதனை முடிந்தவுடன் அனைவருக்கும் விருந்து கொடுப்பார்கள். அதில்தான் சபையாருக்கு மிகுந்த சந்தோஷம்.

சில சபைகளில் விசுவாசிகள் தங்கள் குடும்பங்களில் இரட்சிக்கப்படாத உறவினர்கள், நண்பர்களை வீட்டிற்கு அழைத்து விருந்து கொடுத்து சபைக்கு அழைத்து வருவார்கள். "கிறிஸ்துமஸ் செய்தி சொல்லப்பட வேண்டிய ஓர் செய்தி" மேலும் சில சபைகளில் கிறிஸ்துமஸ் கீதபவனி போகும்போது புறஜாதி குடும்பத்தார்கள் இவர்களை தங்களது வீட்டிற்கு அழைத்து பாடல் பாடி எங்களையும் ஆசீர்வதியுங்கள் என்று அழைப்பார்கள். சில் வெளியில் நின்று பார்த்துக் கொண்டிருக்கும் போது அவர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் பிறப்பின் செய்தியை கூறும் போது, அவர்கள் வீட்டிற்குள் அழைத்துச் சென்று ஜெபிக்க கூறுவார்கள். அப்போது சபை விசுவாசிகளுக்கு மிகுந்த சந்தோஷம் உண்டாகும்.



நற்செய்திக்கு வழிகாட்டிய நட்சத்திரம் :

கிறிஸ்துமஸ் வந்து விட்டால் ஊரெங்கும், தெருவெங்கும், வீடெங்கிலும் விதவிதமான நட்சத்திரங்கள், அழகான மின்னொளிகள் அனைவரின் கண்களையும் கவருகின்றன. ஆனால் கிறிஸ்துவின் பிறப்பன்று கிழக்கே சாஸ்திரிகள் கண்ட நட்சத்திரம் அழகையும், ஒளியையும் மட்டும் தரவில்லை. மத்தேயு 2:9,10 சொல்லுகிறது அவர்கள் கிழக்கில் கண்ட நட்சத்திரம் அவர்களுக்கு முன்சென்றது. அவர்கள் அந்த நட்சத்திரத்தைக் கண்ட போது மிகுந்த ஆனந்த சந்தோஷமடைந்தார்கள். அந்த நட்சத்திரம் மிகுந்த ஆனந்த சந்தோஷத்தை தந்தது.

எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியாக இயேசு நமக்குள் வந்தபடியால் நாமும் உலகத்திற்கு வெளிச்சமாக இருக்கிறோம். உன் வெளிச்சத்தினிடத்திற்கு ஜாதிகளும், உதிக்கிற உன் ஒளியினிடத்திற்கு ராஜாக்களும் நடந்து வருவார்கள். (ஏசாயா 60:3) நம் வாழ்வின் பிரகாசத்தின் மூலமாக அநேகர் நம்மை தேடி வந்து "இயேசுவின் பிறப்பை" அறிந்து கொள்ள நம்மை அர்ப்பணிப்போம்.

உன்னதத்திலிருந்து தோன்றிய அருணோதயமாகிய நம்மை சந்தித்த இயேசுவை உலகமெங்கும் பிரசித்தம் செய்வோம்.

இந்நாள் நற்செய்தி அறிவிக்கும் நாள்; நாம் மனவுனமாயிருந்து, பொழுது விடியுமட்டும் காத்திருந்தால் குற்றம் நம்மேல் சுமரும். 2 இராஜாக்கள் 7 : 9 நாமும் நம் இயேசுவின் பிறப்பை அறிவிக்க விரைந்திடுவோம்.



**இனிய கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள்**



# பீல் ஆதிவாசி விசுவாசிகளுக்கு வேதப்புத்தகங்கள்





**கர்த்தருடைய வசனம் அத்தேசமெங்கும் பிரசித்தமாயிற்று - அப்.13:49.**

கைகளில் வில் அம்புகளை வைத்துக்கொண்டு திருடியும், கொள்ளையடித்தும் சாராயத்தைக் காய்ச்சி குடித்தும் கொண்டிருந்த பீல் மக்கள். மந்திரப் பூஜைகள் செய்து பிசாசின் பிடியிலும், அந்தகாரத்திலும் வாழ்ந்து வந்த பீல் மக்கள் மத்தியில் ஷாலோம் தரிசனப் பணிகளை தேவன் கொண்டு வந்தது மட்டுமல்ல, மகத்துவமான காரியங்களையும் செய்திருக்கிறார்.

கடந்த 25 ஆண்டுகளில் 600 க்கும் மேலான பீல் சுதேச ஊழியர்களை எழுப்பவும் அவர்கள் மூலமாக 660 க்கும் மேற்பட்ட சபைகளை உருவாக்கவும் தேவன் கிருபை தந்துள்ளார். பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெற்று வருகிறார்கள்.

ஒவ்வொரு கிராம விசுவாசிகள் எங்களிடம் இந்த கறுப்புக் கலர் புத்தகம் என்னவென்று ஆவலாய் கேட்பார்கள். மேலும் எங்களுக்கு ஒன்று தாருங்கள் என கேட்டு வேதாகமத்தை வாங்கி பயபக்தியுடன் அரவணைத்து வைத்துக் கொள்வார்கள். அவர்களுக்கு இலவசமாக வேதாகமத்தைக் கொடுக்காமல் குறைந்த விலையாக ரூ. 50/-க்குக் கொடுத்து வருகிறோம்.

கடந்த ஆண்டு 6,000 க்கும் மேலானவர்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டார்கள். அந்த விசுவாசக் குடும்பத்தார் ஆவலுடன் வேதப்புத்தகத்தைக் கேட்கவே அவர்களுக்கு வேதப்புத்தகம் வழங்கப்பட அநேகச் சபைகள் மற்றும் தேவப்பிள்ளைகளிடம் அறிவிப்பு கொடுத்தோம். கடந்த வருடம் தேவக்கிருபையினால் சுமார் 4,000 வேதப்புத்தகங்களை வாங்கி மிகக் குறைந்த விலையில் வழங்க தேவன் கிருபைத் தந்தார்.



இவ்வருடம் 25,000 வேதப்புத்தகங்கள் குஜராத்தி, ஹிந்தி மொழியில் வழங்கப்பட வேண்டும். ஒரு வேதப் புத்தகத்திற்கு ரூ. 150/- வீதம் 25,000 வேதப்புத்தகங்களுக்கு நிதி உதவி செய்ய ஆதரவாளர்கள் தேவை. கிராமங்களில் வாழும் பீல் ஆதிவாசி மக்களுக்கு வேதப்புத்தகம் வழங்க தேவ ஜனங்களாக, குடும்பமாக, சபையாக முன் வாருங்கள். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

# ஷாலோம் ஊழியத்தின்
# அவசர மற்றும் அவசியத் தேவைகள்



மூத்த சுதேச ஊழியர்களான தலைவர்களுக்கு, ஒவ்வொருவரும் 20 கிராம சபைகளை கண்காணிக்கவும், வெளி ஊழியங்களுக்குச் செல்லவும் ரூ. 50,000/- மதிப்பில் 50 மோட்டார் சைக்கிள்கள் தேவை.



கிராமங்கள் தோறும் இயேசு திரைப்படத்தின் மூலமாக சுவிசேஷம் அறிவிக்க சுமார் ரூ.40,000 மதிப்புள்ள 8 L.C.D Projector உடனடியாகத் தேவை.



சுமார் 300 சபைகளுக்கு ரூ. 3500/- மதிப்பில் டோலாக், ஜால்ரா, சிங்கி மற்றும் கிராம சபைகளில் உபயோகப்படுத்தக் கூடிய இசைக் கருவிகள் தேவை.



400க்கும் அதிகமான சபைகளில் மின்சார வசதி கிடையாது. வசதிகள் இருந்தாலும் ஒழுங்காக மின்சாரம் கிடைப்பதில்லை. அப்படிப்பட்ட கிராமங்களில் அதிகமான விசுவாசிகள் உள்ள சபைகளுக்கு சுமார் ரூ. 6500/- மதிப்பிலான பேட்டரியுடன் இயங்கக்கூடிய **Ahuja, Stranger, speaker Box with Amplifer** போன்ற உபகரணங்கள் **300** சபைகளுக்குத் தேவை.



இந்த ஆண்டு 10,000 புதிய விசுவாசக் குடும்பங்களுக்குக் கொடுக்கும்படியாக குஜராத்தி ஹிந்தி மொழிகளில் ரூ. 150/- வீதம், 10,000 வேதாகமங்களுக்கு, நிதி உதவி தேவை.



தமிழ்நாட்டில் ஷாலோம் ஊழியங்களை சபைகள் மற்றும் தேவ ஜனங்களுக்கு அறிமுகம் செய்து, பீல் மக்கள் இரட்சிப்பிற்காக ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்களை எழுப்பி நிதி உதவி சேகரித்து அனுப்பும் ஷாலோம் பிரதிநிதிகள் குறைந்தது 500 பேர்கள் தேவை.

ஜெபிப்போம்! கொடுப்போம்! செயல்படுவோம்!

தேவ நாமத்தை மகிமைப்படுத்துவோம்!

# ஜெபகுறிப்புகள்

❖ ஊழியர்களுக்கு விரோதமாய் கிரியை செய்கிற எல்லா மந்திர, தந்திர வல்லமைகள் அழிக்கப்பட ஜெபிப்போம்.

❖ தேவனுடைய திட்டங்களை பூமியிலே செயல்படுத்த, தேவ ஞானம், கிருபை, வல்லமை, அபிஷேகம், அளவில்லாமல் கொடுக்கும்படியாய் பாரத்தோடு ஜெபிப்போம்.

❖ ஊழியம் செய்யும் ஊழியர்கள் அசதியாய் இராமல் ஜாக்கிரதையாய் ஊழியம் செய்ய, விசுவாசிகளுக்கு மாதிரியாய் காணப்பட, பரிசுத்தத்தை வெளிப்படுத்த ஜெபிப்போம்.

❖ ஊழியர்களுக்கு நல்ல ஜீவன், சுகம், பெலன், தீர்க்காயுசை தேவன் கட்டளையிடும்படியாய், பாடுகள் மத்தியில் சோர்ந்து போகாமல், எலியாவைப் போல வைராக்கியமாய் செயல்பட தேவன் உதவி செய்யும்படியாய் பாரத்தோடு ஜெபிப்போம்.

❖ எல்லா ஊழியர்களுக்குள்ளும் அன்பு, ஐக்கியம், ஒருமனம், ஒற்றுமையை தேவன் கட்டளையிடும்படியாய், அதன் மூலம் தேசத்திலே மிகப்பெரிய எழுப்புதல் உண்டாகும்படியாய் ஜெபிப்போம்.

❖ ஊழியர்கள் சத்தியத்தை சத்தியமாய் போதிக்க, கள்ள உபதேசங்கள், வேத புரட்டுகள் திருச்சபைக்குள் நுழையாதவாறு திறப்பில் நின்று கதறுகிற மோசேக்களை தேவன் எழுப்பும் படியாய் பாரத்தோடு ஜெபிப்போம்.

❖ நம்முடைய ஊழியர் குடும்பங்களுக்காய், பிள்ளைகளை தேவன் வல்லமையாய் பயன்படுத்தும்படியாய் கண்ணீரோடு ஜெபிப்போம்.

❖ ஊழியர்கள் பிரயாணங்களுக்கு விரோதமாய் கிரியை செய்யும் தீய வல்லமைகள் அழிக்கப்பட..

❖ வாகனம் வைத்திருக்கிற ஒவ்வொரு தேவனுடைய ஊழியர்களும் வெளியூர்களுக்கு வெகுதூரம் பிரயாணம் பண்ணுகிற பிள்ளைகளுக்காய், நல்ல கண்விழிப்பை தேவன் கட்டளையிடும்படியாய் ஊக்கமாய் ஜெபிப்போம்.

❖ ஒவ்வொரு வாகனத்தின் மேல் தேவன் தம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தை தெளிக்கும்படியாய் ஜெபித்து, பொறுமையோடு வாகனத்தை ஓட்ட தேவன் உதவி செய்யும்யடியாய் பாரத்தோடு ஜெபிப்போம்.

❖ மிஷனெரி குடும்பங்கள் அனைத்தையும் தேவன் நடத்தும்படியாய் பிள்ளைகளுடைய கல்வி, தேவைகள் சந்திக்கப்படும்படியாய் ஜெபிப்போம்.

# ஜெபகுறிப்புகள்

- ஒவ்வொரு ஊழியர்களை தேவன் கரத்தில் எடுத்து பயன்படுத்தும்படியாய் அவர்களுக்கு விரோதமாய் எழும்பும் தீய வல்லமைகளை தேவன் அழித்து நிர்மூலமாக்கும்படியாய் நாம் கண்ணீரோடு ஜெபிப்போம்.

- தங்கள் உயிர்களை பணயம் வைத்து கிறிஸ்துவின் சேனையில் யுத்த வீரர்களாய் நின்று ஊழியம் செய்யும் ஊழியர்களை தேவன் பலப்படுத்தவும், சோதனைகள், உபத்திரவங்கள் மத்தியில் சோர்ந்து போகாது வைராக்கியத்தோடு ஊழியம் செய்யும்படியாய் பாரத்தோடு ஜெபிப்போம்.

- மலைகளிலும், காடுகளிலும், குகைகளிலும், நாகரிகமற்ற மக்கள் மத்தியில், பாஷை தெரியாத ஜனங்கள் மத்தியில் ஊழியம் செய்யும் மிஷனெரிகளை தேவன் பலப்படுத்தும்படியாய் நாம் பாரத்தோடு ஜெபிப்போம்.

- ஊழியர்களின் பரிசுத்த வாழ்க்கைக்காகவும், ஊழியர்களை தேவன் அக்கினி ஜீவாலையாக எடுத்து பயன்படுத்தும்படியாகவும் நாம் பாரத்தோடு ஜெபிப்போம்.

- ஊழியர்கள் தேவவார்த்தைகளை பகிர்ந்துக் கொள்ளும்போது தேவ அபிஷேகத்தினால் நிறைந்தவர்களாய் காணப்படும்படியாக நாம் ஜெபிப்போம்.

- ஊழியர்கள் ஊழியத்திற்கு அர்ப்பணித்த பின் தங்கள் தேவைகள் மற்றும் சூழ்நிலைகள் நிமித்தமோ பிரச்சனைகளினிமித்தமோ தங்கள் ஊழியத்தை விட்டு பின்வாங்கி போகாமல் இருக்கும்படியாகவும் நாம் பாரத்தோடு ஜெபிப்போம்.

- ஊழியர்கள் ஊழியங்களை வைராக்கியத்தோடும், பாரத்தோடும், வல்லமையோடும் செய்யும்படியாக நாம் ஜெபிப்போம்.

- ஊழியர்கள் சபை விருத்தியடையும் படியாகவும், அநேக விசுவாசிகள் மந்தையில் சேரும்படியாகவும் நாம் பாரத்தோடு ஜெபிப்போம்.

- ஊழியர்களது குடும்பங்கள், அவர்கள் பிள்ளைகளுடைய கல்வி, எதிர்காலங்கள் ஆசீர்வதிக்கும்படியாகவும், பிள்ளைகளும் தொடர்ந்து ஊழியங்களை செய்யும் படியாக நாம் ஜெபிப்போம்.

## குஜராத் பணித்தளத்தில் தேவன் செய்த அற்புதங்களுக்காக தேவனைத் துதியுங்கள்

ஊழியர்.சுரேஷ் ஜே.டாமோர் — தனசியா

கன்னுபாய் என்ற சகோதரன் சுவாசிக்க முடியாமல் பல நாட்களாக வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கினால் கஷ்டப்பட்டார். இயேசுவை விசுவாசித்து பாரத்தோடு ஜெபித்தபோது சுகம் பெற்றார்.

ஊழியர். சாமுவேல் குமன் டாமோர் — தாட்காட்

கமலி என்ற சகோதரன் அசுத்த ஆவியினால் பாதிக்கப்பட்டிருந்தார். மந்திரம் செய்வினை செய்தும் ஆடு,கோழிகளை வெட்டி பலி செலுத்தியும் பலனில்லை. இவரை சபைக்கு அழைத்து சென்று ஜெபித்தபோது விடுதலைப் பெற்றார்.

ஊழியர்.ரமேஷ்மச்சார் — வாட்லி

தினேஷ் என்ற சகோதரன் 2 வாரமாக காய்ச்சலினால் பல வாரமாக கஷ்டப்பட்டார். பல மருத்துவம் செய்தும் பலனில்லை. இயேசுவை விசுவாசித்து கண்ணீரோடு ஜெபித்தபோது சுகம் பெற்றார்.

ஊழியர்.நவல்சிங் பில்வாள் — கலாலியாவாட்

ரங்குபாய் என்ற சகோதரன் 5 வருடமாக சரீர பெலவீனத்தால் வேதனைப்பட்டார். பல வைத்தியம் செய்தும் மந்திரம் பார்த்தும் பலனில்லை. இயேசுவை நம்பிக்கையோடு ஏற்றுக்கொண்டு ஜெபித்தபோது சுகம் பெற்றார்.

ஊழியர்.கரன் ராட்டுவா — தாவா

கோகிலா என்ற சகோதரி கை வலியினால் வேதனைப்பட்டார். இயேசுவை விசுவாசித்து சபைக்கு சென்று பொருத்தனை செய்து ஜெபித்தபோது சுகம் பெற்றார்.

பாவ்சிங் என்ற சகோதரன் 3 மாதமாக கால் வலியினால் மிகவம் பாதிக்கப்பட்டிருந்தார். பல வைத்தியம் செய்தும் பிரயோனமில்லை. இறுதியில் ஊழியரை சந்தித்து ஜெபித்தபோது பரிபூரண சுகம் பெற்றார்.

ஊழியர்.கீர்த்தன் அமளியார் — காப்ரியா

நபலி என்ற சகோதரி அசுத்த ஆவியினால் அலைகழிக்கப்பட்டிருந்தார். மந்திர பில் லி சூனிய கிரியைகளை செய்தும் மருத்தும் செய்தும் பலனில்லை. நபலியாவை சபைக்கு அழைத்து சென்று மன்றாடி ஜெபித்தபோது விடுதலைப் பெற்றார்.

ஊழியர். வர்சிங் பர்மார் — சிமளியா

விஜய் என்ற சகோதரனுக்கு வயது 20. இவர் பல மாதமாக புத்தி சரியில்லாமல் வேதனைப்பட்டார். பல மருத்துவர்களை பார்த்தும் எந்தவித பலனுமில்லை. ஆடு,கோழிகளை வெட்டி வன தேவதைகளுக்கு பலியிட்டும் பிரயோஜனமில்லை. இந்நிலையில் விஜயை ஊழியரிடம் அழைத்துசென்று இயேசுவை நம்பிக்கைய ஏற்றுக்கொண்டு ஜெபித்தபோது பரிபூரண விடுதலைப் பெற்றார்.

ஊழியர்.தினேஷ் நினாமா — இட்டா

கோகி என்ற சகோதரி டி.பி வியாதியினால் பல வருடமாக பாதிக்கப்பட்டிருந்தார். பல மருந்துகள் சாப்பிட்டும் பலனில்லை. இயேசுவை நம்பிக்கையோடு ஏற்றுக்கொண்டு ஜெபித்தபோது விடுதலைப் பெற்றார்.

# இராஜஸ்தான் பணித்தளத்தில் தேவன் செய்த அற்புதங்களுக்காக தேவனைத் துதியுங்கள்

ஊழியர். பக்குல் சந்திர அடா பிச்சாவாடா

லட்சுமன்பாய் என்ற சகோதரன் 20 வருடமாக கை மற்றும் கால் எரிச்சலினால் மிகவும் வேதனைப்பட்டார். மந்திரம் மற்றும் செய்வினை செய்தும் பலனில்லை. தனது மாமியார் மூலம் இயேசுவை ஏற்றுக்கொண்டு சபைக்கு சென்று ஜெபித்தபோது பரிபூரண விடுதலைப் பெற்றார்.

ஊழியர். சத்திய நாராயண கராசியா மகுடி

ஜாவ்ரிபேன் என்ற சகோதரி ஒரு வருடமாக வியாதிப்படுக்கையில் வேதனைப்பட்டார். பல மருத்துவம் செய்தும் மந்திரவாதிகளை நாடி சென்றும் ஆடு, கோழிகளை வெட்டி பலி செலுத்தியும் பலனில்லை. ஷாலோம் விசுவாசி மூலமாக இயேசுவை நம்பிக்கையோடு ஏற்றுக்கொண்டு சபைக்கு சென்று ஜெபித்தபோது பரிபூரண சுகத்தைப் பெற்றுக்கொண்டார்.

ஊழியர். சுக்லால் டாமோர் கரியா

நானுபேன் என்ற சகோதரி 2 வருடமாக வியாதிப்படுக்கையில் பாதிக்கப்பட்டிருந்தார். பல மந்திரங்களை செய்தும் பலனில்லை. அதிக பணம் செலவு செய்தும் முடியாத நிலையில் இயேசுவைப்பற்றி கேள்விபட்டு சபைக்கு சென்று ஜெபித்தபோது அற்புத சுகம் பெற்றார்.

ஊழியர். பகதூர் அடா டிம்பா மகுஜ

டிடிபேன் என்ற சகோதரி அசுத்த ஆவியினால் பாதிக்கப்பட்டிருந்தார். இவரை ஷாலோம் சபைக்கு அழைத்துசென்று ஜெபித்தபோது அற்புத சுகம் பெற்றார்.

ஊழியர். பங்கஜ் டாமோர் கேவாடிாய

சாரதாபேன் என்ற சகோதரி 4 வருடமாக வயிற்று பகுதியில் வேதனைப்பட்டார். மருத்துவ சோதனை செய்த போது வயிற்றில் கட்டி இருந்தது. பல மந்திரவாதிகளை நாடியும் ஆடு, கோழிகளை வெட்டி பலி செலுத்தியும் பலனில்லை. கிரன் பேன் என்ற சகோதரி மூலமாக இயேசுவை நம்பிக்கையோடு ஏற்றுக்கொண்டு ஜெபித்தபோது அற்புத சுகம் பெற்றார்.

ஊழியர். சபூர் புரியா ஜாடி

தௌாபாய் என்ற சகோதரி பல வருடமாக குடிப்பழக்கத்திற்கு அடிமையாக்கப்பட்டு வியாதியினால் வேதனைப்பட்டார். பல மருத்துவம் செய்தும் மந்திரம் செய்தும் எந்தவித பலனுமில்லை. இந்நிலையில் இவருக்கு இயேசுவைப்பற்றி கூறி கண்ணீரோடு ஜெபித்தபோது இப்பழக்கத்தில் இருந்து விடுதலைப் பெற்றார்.

ஊழியர். ஹக்குலா டின்டோர் ஜாகோடியா நாத்தா

தன்னாபாய் என்ற சகோதரன் கடந்த 7 வருடமாக கண்பார்வை இல்லாமல் வேதனைப்பட்டார். பல மந்திரம் செய்தும் ஆடு, கோழிகளை வெட்டி பலி செலுத்தியும் மருத்துவர்களை நாடியும் எந்தவித பலனுமில்லை. இறுதியில் இயேசுவைப்பற்றி கேள்விப்பட்டு ஜெபித்தபோது கண்பார்வை தெரிந்தது.

## மத்தியப்பிரதேசம் பணித்தளத்தில் தேவன் செய்த அற்புதங்களுக்காக தேவனைத் துதியுங்கள்

ஊழியர்.மால்சிங் கராசியா பூகார்

சுனிதாபேன் என்ற சகோதரி 2 வருடமாக கை, கால் மற்றும் வயிறு வலியினால் நடக்க முடியாமல் இருந்தார். மந்திரம் மற்றும் மருத்துவம் செய்தும் 20 கோழிகளை வெட்டி பலி கொடுத்தும் சுகம் கிடைக்கவில்லை. இவரது பெரியப்பா மூலம் இயேசுவை குறித்து கேள்விப்பட்டு ஊழியரிடம் ஜெபித்தபோது பரிபூரண விடுதலைப்பெற்று சபைக்கு செல்கிறார்.

ஊழியர்.ஜோர்சிங் புரியா பிட்டோல்

புல்ஜி என்ற சகோதரன் 11 வருடமாக கால்மற்றும் இடுப்பு வலியினால் வேதனைப்பட்டார். பல வைத்தியம் செய்தும் மந்திரவாதிகளை நாடியும் பலனில்லை. இயேசுவை விசுவாசித்து ஜெபித்தபோது சுகம் பெற்றார்.

மங்கிபேன் என்ற சகோதரி 5 வருடமாக இடுப்பு வலியினால் கஷ்டப்பட்டார். பல வைத்தியம் செய்தும் பலனில்லை. இயேசுவின் நாமத்தில் ஜெபித்தபோது அற்புத சுகம்பெற்றார்.

லசியாபாய் என்ற சகோதரன் 6 வருடமாக தலைசுற்றினால் பல மாதங்களாக பாதிக்கப்பட்டிருந்தார். இயேசுவை விசுவாசித்து கண்ணீரோடு மன்றாடி ஜெபித்தபோது சுகம் பெற்றார்.

ஊழியர்.ராகேஷ் பேஜ தேவ்கா

ரமேஷ்பாய் என்ற சகோதரனின் மகள் வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கினால் மிகவும் பாதிக்கப்பட்டார். பல வைத்தியம் செய்தும் பலனில்லை. இயேசுவை விசுவாசித்து பாரத்தோடு ஜெபித்தபோது பரிபூரண சுகம் பெற்றார்.

ஊழியர்.களிாய தேவ்கா தேத்காம்

ரமிளாபேன் என்ற சகோதரி அசுத்த ஆவியினால் பாதிக்கப்பட்டிருந்தார். இவரை சபைக்கு அழைத்து சென்று ஜெபித்தபோது பரிபூரண விடுதலைப் பெற்றார்.

ஊழியர்.குல்லா டாமோர் சாஜேலி

குமாபேன் என்ற சகோதரி கூலி வேலைக்காக குஜராத்திற்கு சென்றிருந்தார். தனது மகளை மாமா,மாமி வீட்டில் விட்டு சென்ற நேரம் மகள் 2 மாதமாக சரீர பெலவீனத்தால் பாதிக்கப்பட்டாள். பல மருத்துவர்களை பார்த்தும் சுகம் கிடைக்கவில்லை. நான் வந்து பார்க்கும்போது பிள்ளை மரிக்கும் தருவாயில் மூச்சு இல்லாமல் இருந்தார். உடனே ஷாலோம் ஊழியரை அழைத்து ஜெபித்தபோது தேவன் மகளுக்கு ஜீவனை கொடுத்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

ஊழியர்.வால்சிங் சகரியா குளியா

கரன்சிங்பாய் என்ற சகோதரன் இடுப்பு வலி,வயிறு வலி மற்றும் ஒரு பக்க தலைசுற்றினால் மிகவும் வேதனைப்பட்டார். பல இடங்களுக்கு சென்று வைத்தியம் செய்தும் பலனில்லை. இயேசுவை விசுவாசித்து கண்ணீரோடு ஜெபித்தபோது பரிபூரண சுகம் பெற்றார்.

ரம்சுபேன் என்ற சகோதரி வெள்ளைப்போக்கு வியாதியினால் பல நாட்களாக பாதிக்கப்பட்டிருந்தார். பல வைத்தியம் செய்தும் பலனில்லை. இயேசுவைப் பற்றி கேள்விப்பட்டு சபைக்கு வந்து ஜெபித்தபோது பரிபூரண விடுதலைப் பெற்றார்.

# பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்

## BLESS A CHILD PROJECT



| | | |
|---|---|---|
| மாணவர் பெயர் | : | அஜய் S. டாமோர் |
| படிக்கும் வகுப்பு | : | 6th Std |
| இனம் | : | M |
| பிறந்தநாள் தேதி | : | 25-12-2005 |
| சொந்த ஊரின் பெயர் | : | மஸ்காமகுடி |
| தாலுகா | : | குசல்கட் |
| மாவட்டம் | : | பான்ஸ்வாடா |
| மாநிலம் | : | இராஜஸ்தான் |
| பள்ளியின் பெயர் | : | Shalom School, Bijalpur |
| தங்கிப் படிக்கும் விடுதி | : | SLM Hostel, Bijalpur |

### மாணவரின் பெற்றோரைப் பற்றி சில வரிகள் :

மாணவரின் பெற்றோரைப் பற்றி சில வரிகள் :

இவனுடைய தகப்பனார் இயேசுவை அறியாத போது சாராயம்,பீடி, தம்பாக்கு போன்ற பாவங்களுக்கு அடிமையாக வாழ்ந்து வந்தார். இவனது சகோதரியின் கை, கால்கள் வீங்கி போய் மிகவும் கஷ்டப்பட்டாள். சுகத்திற்காக எவ்வளவோ மந்திரம் மற்றும் மருத்துவம் பார்த்தும் எந்த பலனுமில்லை. இந்நிலையில் ஷாலோம் ஊழியர் பவன்குமார் அவர்கள் இயேசுவைப் பற்றிக் கூறி இவனுடைய சகோதரிக்காக ஜெபித்த போது, தேவன் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். அந்த அற்புதத்தின் மூலம் குடும்பமாக இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார்கள். பின்பு தொடர்ந்து ஷாலோம் டான்டிச்சோட்டி சபைக்கு சென்று ஆவிக்குரிய வாழ்வில் வளர்ந்தார். தற்போது கடந்த 8 வருடங்களாக ஷாலோம் டான்டிச்சோட்டி சபையில் விசுவாசியாக இருந்து வருகிறார்.

மாணவரைப் பற்றி சில வரிகள் :

அஜய் நன்றாக படிப்பான். நன்றாக ஜெபிப்பான். கிரிக்கெட் விளையாட்டில் ஆர்வமுண்டு. இவனுக்கு 1 சகோதரன் மற்றும் 1 சகோதரியும் உண்டு.

ஜெபியுங்கள் :

இவனுக்காக, இவனுடைய படிப்பிற்காக, பெற்றோர் செய்யும் கூலி வேலைக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

**Sponsor's Name : Blessing Easter Raja, Erode.**

ஜெபித்து தாங்க முன் வாருங்கள்

பிரியமானவர்களே நீங்களும் ஜெபித்து மாதம் ரூ.700 கொடுத்து பீல்ஆதிவாசி மாணவரைத் தாங்க முன்வரலாம்.

Shalom Charity Mission என்ற பெயரில் இதற்கான காணிக்கைகளை D.D.அல்லது Cheque மூலமாக அனுப்ப அன்பாய் கேட்கிறோம் உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களையம் தாங்கும்படியாக தயவாய் அறிமுகப்படுத்தி வையுங்கள்

# கிறிஸ்துமஸ் பண்டிகையின் வரலாறு

கிறிஸ்துமஸ் என்றவுடன் எல்லோருக்கும் முதலில் நினைவுக்கு வருவது கிறிஸ்துவ நண்பர்கள் வீட்டிற்கு சென்றால் கேக், தடபுடல் விருந்துதான். ஆனால் கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் துவங்கிய பின்னணியும், அதில் ஏற்பட்ட பல மாறுதல்கள் குறித்தும் பலருக்கும் தெரியாது. இயேசு கிறிஸ்துவின் பிறந்த தினம் தான் கிறிஸ்துமஸ் என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்று தான். ஆனால் இயேசுநாதர் எப்போது பிறந்தார்? கிறிஸ்துமஸ் என்ற வார்த்தையின் பின்னணி ஆகியவை சுவாரஸ்யமானது. கிறிஸ்துமஸ் என்ற வார்த்தை "கிறிஸ்ட் மாஸ்" என்ற 2 வார்த்தைகளின் இணைப்பு மூலம் உருவானது. கிறிஸ்துமஸ் பண்டிகையை முதன் முதலில் 4வது நூற்றாண்டை சேர்ந்த மேற்கத்திய கிறிஸ்தவர்கள் கொண்டாடியதாக சில வரலாற்று குறிப்புகள் உள்ளன. எப்படி இருப்பினும் கிறிஸ்துமஸ் பண்டிகை என்பதை உலகம் முழுவதும் கிறிஸ்தவ மக்கள் மிகச் சிறப்பான நாளாக கொண்டாடி மகிழ்கின்றனர்.

இப்படி கிறிஸ்துமஸ் பண்டிகை நாட்டு மக்களிரைடயே பிரபலமடைந்து பின்னர் உலகமெங்கும் விமரிசையாக கொண்டாடும் வழக்கம் உருவானது. கிறிஸ்துமஸ் பண்டிகை அன்று மகிழ்ச்சியை பகிர்ந்துக் கொள்ள பரிசுப் பொருட்களை பரிமாறி கொள்வதும் போட்டிகளை நடத்துவது என்று பல கோணங்களில் கொண்டாட்டம் விரிவடைந்தது. கிறிஸ்துமஸ் பண்டிகைக்காக முதன் முதலில் கிறிஸ்துமஸ் மரம் வைக்கும் வழக்கம் 1510ம் ஆண்டும் ரிகா என்ற இடத்தில் துவங்கியது. கிறிஸ்துமஸ் பண்டிகையின் போது கிறிஸ்தவர்கள் குழுக்களாக சேர்ந்து கேரல் சர்வீஸ் என்ற நிகழ்ச்சியை நடத்துகின்றனர். இந்த கேரல் நிகழ்ச்சியில் குழந்தை இயேசுவை வாழ்த்தியும் அவரது பிறப்பு அவர் உலகில் வந்த நோக்கம் உள்ளிட்ட கருத்துகளை கொண்ட பாடல்கள் பாடப்படுவது வழக்கம். கடந்த 1847ம் ஆண்டு பிரான்சில் தான் முதல் முதலாக கிறிஸ்துமஸ் கேரல் சர்வீஸ் நடத்தப்பட்டதாக தெரிகிறது. இந்த கேரலில் "ஓ ஹோலி நைட்" என்ற பிரபல கிறிஸ்துமஸ் பாடல் பாடப்பட்டதாக கூறப்படுகிறது. கிறிஸ்துமஸ் பண்டிகையை ஒட்டி வரலாற்றில் சில ருசிகரமான சம்பவங்கள் நடைபெற்று உள்ளன. பண்டைய காலத்தில் வாழ்ந்த பாரசீகர்களும் பாபிலோனியர்களும் கிறிஸ்துமஸ் பண்டிகையை வருடத்தின் நல்ல நாளாக கொண்டாடி வந்தனர். கிறிஸ்துமஸ் பண்டிகை அன்று பாரசீக நாட்டில் உள்ள எல்லா அடிமைகளுக்கும் ஒருநாள் விடுதலை அளிக்கப்படும். மேலும் சிலர் தங்கள் அடிமைகளை பரிசாக பரிமாறி கொண்டனர். சில எஜமான்கள் கிறிஸ்துமஸ் பண்டிகை அன்று மட்டும் அடிமைகளுக்கு வீட்டில் முழு சுதந்திரம் கொடுத்ததாகவும் வரலாற்றில் குறிப்புகள் உள்ளது. பண்டைய காலத்தில் வாழ்ந்த ஐரோப்பியர்களுக்கு பேய், பிசாசு அசுத்த ஆவிகள் உள்ளிட்டவைகளுக்கு அதிகமாக பயந்தனர். வருடத்தில் நீண்ட இரவு கொண்ட நாட்களில் அவை மக்களுக்கு தீமை விளைவிக்கும் என்று நம்பினர். இதனால் நீண்ட இரவுகளுக்கு பிறகு சூரியன் உதிக்க வேண்டும் என்பதற்காக கிறிஸ்துமஹு பண்டிகையை கொண்டாடி வந்துள்ளனர்.

நான்காம் நூற்றாண்டுகளில் வாழ்ந்து வந்த புனித அகுஸ்தினார் குறிப்பிடுகிறார்இது கிறிஸ்மஸ் ஒரு தின விழா அல்ல மாறாக மீட்பை மையப்படுத்தி இன்றே நமது மீட்பு உதயமானது என்ற நிலையில் உணர்ந்து கொண்டாட வேண்டும் என்பதை உணர்த்துகிறார்.

# கிறிஸ்மஸ் நாட்களில் பீல் மக்களை நினைப்போம்



நமக்காய் பூமியிலே பாலகனாய் பிறந்து, அற்புதங்களையும் அதிசயங் களையும் இந்த பூமியிலே செய்து, பாடு பட்டு, சிலுவையிலே மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, மூன்றாம் நாளிலே உயிர்த் தெழுந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பிறந்த நாளை நாம் கொண்டாடுவதே கிறிஸ்துமஸ் தினமாகும்.

வருடந்தோறும் கிறிஸ்துமஸ் காலங்களில் நம்முடைய சுதேச ஊழியர்களுக்கும் அவர்கள் மனைவிமார் களுக்கும், அவர்கள் பிள்ளைகளுக்கும் புத்தாடைகள் கொடுத்து, அவர்களும் கிறிஸ்துமஸ்-ஐ மகிழ்ச்சியாய் கொண்டாட உதவி செய்ய தேவன் நமக்குத் தந்த கிருபைக்காக அவரைத் துதிப்போம். அதே போல் நம்முடைய பள்ளி மற்றும் விடுதியில் படித்து வரும் நம் ஆதிவாசி மாணவ, மாணவிகளுக்கும் சிறு பிள்ளைகளுக்கும் புத்தாடைகள் மற்றும் வெகுமதிகளை கிறிஸ்துமஸ் தினங்களில் கொடுத்து வருகிறோம்.

அதே போல் இந்த ஆண்டும் இந்த காரியங்களுக்காக சுமார் ரூ.20 லட்சங்கள் வரை தேவையுள்ளது. ஆகவே கர்த்தர் உங்கள் உள்ளத்தில் ஏவினால் ஒரு ஊழியரின் குடும்பத்திற்கு குறைந்தது ரூ. 1500/- அல்லது அதற்கு மேலாகவோ, ஒரு ஆதிவாசி பிள்ளைக்கு குறைந்தது ரூ. 500/- அல்லது அதற்கு மேலாகவோ, கிறிஸ்துமஸ் வெகுமதியாகக் கொடுத்து உதவ அன்பாய் அழைக்கிறோம்.

இந்த வெகுமதி காணிக்கைகளை இந்த மாதத்திற்குள்ளேயே அனுப்பினால் சுதேச ஊழியர்கள் குடும்பத்திற்கும், ஆதிவாசி பிள்ளைகளுக்கும் அன்பளிப்புகளை கிறிஸ்துமஸ்-க்கு முன்பாக கொடுக்க உதவியாக இருக்கும்.

நீங்கள் கொடுக்க விரும்பும் காணிக்கைகளை நேரடியாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கலாம், அல்லது எங்கள் ஷாலோம் பிரதிநிதிகளிடம் கொடுத்து இரசீதைப் பெற்றுக் கொள்ளலாம்.



# நாகர்கோவில் மிஷனெரி தரிசனக் கூடுகை மற்றும் பிரதிஷ்டை

## இயேசு விடுவிக்கிறார் உபவாச ஜெபம் நாகர்கோவில்

கர்த்தருடைய பெரிதான கிருபையால் 12.11.2016 அன்று நாகர்கோவிலில் இயேசு விடுவிக்கிறார் உபவாச ஜெபத்தில் பேராயர். வே. தேவதாஸ் அவர்கள் கலந்து கொண்டு தேவ செய்தியளித்தார்கள்.

## இயேசு நம்மோடு சபை நாகர்கோவில்

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் நாகர்கோவிலுள்ள இயேசு நம்மோடு சபையில் 13.11.16 அன்று காலை ஆராதனையை ஷாலோம் ஊழியத்தின் பேராயர் வே. தேவதாஸ் அவர்கள் தேவ செய்தியளித்தார்கள். இதற்கு வாய்ப்பளித்த போதகர் ஆண்டெனி மைக்கேல் அவர்களுக்கு எங்கள் நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம். இந்த வாய்ப்பினை உருவாக்கி கொடுத்த சகோ. அமல்ராஜ் அவர்களுக்கும் நன்றியை தெரிவிக்கிறோம்

## ஷாலோம் மிஷனெரி தரிசனக் கூடுகை மற்றும் பிரதிஷ்டை

நாகர்கோவிலில் உள்ள பிரியம் திருமண மண்டபத்தில் வைத்து Rev. E. ஹென்றிதாஸ் (சி.எஸ்.ஐ ஆலயம் நேசமணிநகர்) உதவி போதகர். Eva .T. ஞான ஜெப செல்வராஜ்(சி.எஸ்.ஐ ஆலயம் நேசமணிநகர்) தலைமையில் ஷாலோம் மிஷனெரி தரிசனக் கூடுகை நடைபெற்றது.

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் 8 பீல் சுதேச ஊழியர்களின் மிஷனெரி பிரதிஷ்டை நடைபெற்று அவர்கள் தங்கள் சாட்சிகளை கூறியும், பாடல்களை பாடி தேவனை மகிமைப்படுத்தினார்கள். மேலும், நமது பேராயர். வே. தேவதாஸ் அவர்கள் தேவ செய்தியளித்தார்கள். மிஷனெரிகளை பிரதிஷ்டை செய்த போதகர் அவர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நாகர்கோவிலில் பிரதிஷ்டை செய்யப்பட்ட பீல் சுதேச ஊழியர்களும், அவர்களைத் தாங்கும் ஆதரவாளர்களும்

1. மனீஷ் சங்காடா( மீனாகியார்) - டாக்டர். ஜெயா செல்வின் ( நாகர்கோவில்)
2. மகேஷ் பர்மார்( ஜாலோத்) - டாக்டர். ராபின்சன் ( திருநெல்வேலி)
3. சாந்திலால் மால் ( பேருபாடா) - டாக்டர். ராபின்சன் ( திருநெல்வேலி)
4. ரமேஷ் மச்சானியா (ஹாஸ்வாட்) - Staff Prayer Fellowship ( Nagercoil)
5. சபூர் புரியா ( பட்டேரா) - திருமதி. லிதிசீயா ஜான்சன் ( ஆலங்கோடு)
6. கேபிலால் கராசியா ( ரோகன்யாமெகஹி) - திரு. செல்லத்துரை( நாகர்கோவில்)
7. பாத்து முனியா ( பூத்பாடா) - திரு. ஜெயக்குமார் ( பணக்குடி)
8. காந்திலால் கராசியா ( பிலாடி) - திருமதி. பெல்ஷியா பொன்மதி ( நாகர்கோவில்)





# மிஷனெரி பிரதிஷ்டை- தூய யோவான் ஆலயம், நாசரேத்

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் நாசரேத் தூய யோவான் சி.எஸ்.ஐ ஆலயத்தில் பேராலய தலைமை குருவானவர் தேவசகாயம் அவர்கள் முன்னிலையில் 13.11.16 அன்று ஷாலோம் ஊழியத்தின் மிஷனெரி பிரதிஷ்டை நடைபெற்றது. நாசரேத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்ட பீல் சுதேச ஊழியர்களும், அவர்களைத் தாங்கும் நாசரேத் ஆதரவாளர்களும்



1. ரமேஷ்சந்திர கட்டாரா(அந்தேஷ்வர்) - திரு. தேவதாஸ்
2. பாதர் டோடியார்(பேடவ்நாத்) - திரு. மனோ எட்வர்ட்
3. மசூர் கனாவா(கொலானா) - Medess Prayer Team

**13.11.2016 சபா மண்டபம் தூய யோவான் சி.எஸ்.ஐ ஆலயம், மிஷனெரி தரிசனக் கூடுகை (நாசரேத்)**

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் நாசரேத் தூய யோவான் பேராலய சபா மண்டபத்தில் வைத்து மிஷனெரி தரிசனக் கூடுகை நடைபெற்றது. இதில் ஷாலோம் ஊழியத்தின் பேராயர். வே. தேவதாஸ் அவர்கள் தேவ செய்தி அளித்தார்கள். இவற்றில் நாசரேத் ஊரை சேர்ந்த சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்கள் ஷாலோம் ஊழியத்தை குறித்து பகிர்ந்து கொண்டார்கள். நமது பீல் சுதேச ஊழியர்கள் ஆடி,பாடி தங்களது சாட்சிகளை கூறி தேவனை மகிமைப்படுத்தினார்கள். இதற்கு வாய்ப்பளித்த பேராலய தலைமை குருவானவர் Rev. S.E.C. தேவசகாயம் அவர்களுக்கும், உதவி போதகர் Rev. தனசிங் அவர்களுக்கும், கூட்டத்தை ஒழுங்கு செய்த சகோ. சுந்தர், சகோ. மர்காஷிஸ் மற்றும், சபை மக்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.





## ஷாலோம் சுதேச ஊழியர் சாட்சி

என்னுடைய பெயர் கேபிலால் கராசியா. நான் இராஜஸ்தான் மாநிலத்தில் பான்ஸ்வாடா மாவட்டத்தில் ரோகனியாமன்னா என்ற கிராமத்தைச் சேர்ந்த பீல் ஆதிவாசி. நான் இயேசுவை அறிவதற்கு முன் சாராயம் குடித்துவிட்டு சண்டைபோட்டு மற்றவர்களை அடித்து மிகவும் துன்பப்படுத்திக் கொண்டிருந்தேன். மற்றும் மந்திரக்கிரியைகளை செய்து மக்களை ஏமாற்றி பணம் சம்பாதித்தேன். பண ஆசை பிடித்தவனாக காணப்பட்டேன்.

இந்த நேரத்தில் பத்தியா என்ற ஷாலோம் ஊழியர் எங்கள் வீட்டிற்கு வந்து இயேசுவைப் பற்றிக் கூறி இந்த உலகத்தில் சமாதானமாக இருக்க வேண்டுமென்றால் ஒரே ஒரு வழி, நீ இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறினார். நானும் சம்மதித்து ஊழியர் நடத்தின கூட்டத்தில் கலந்துக் கொண்டு ஜெபித்தேன். என்னுடைய உள்ளத்தில் ஒரு தெய்வீக சமாதானம் உள்ளத்தை நிரப்புவதை உணர்ந்தேன். தொடர்ந்து கூட்டங்களில் கலந்து கொண்டு 2000-ல் இயேசுவை ஏற்றுக் கொண்டு 2001-ல் ஒரு கூட்டத்தில் பரிசுத்தாவியின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டேன். 2002-ல் ஞானஸ்நானம் பெற்றேன். பின்பு என் கிராம மக்களைக் குறித்த பாரம் என்னுடைய உள்ளத்தில் ஏற்படவே தேவனுக்கென்று அர்ப்பணித்து ஷாலோம் ஊழியத்துடன் இணைந்து எங்கள் கிராமத்தில் ஊழியம் செய்து வருகிறேன்.

**Sponsor Name : Mr. Chelladurai. Y (K.K.Dist)**

**மாதந்தோறும் ரூ. 2500/ கொடுத்து பீல் சுதேச ஊழியரை தாங்க முன்வாருங்கள்**






## மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனை
## பெத்தேல் லுத்தரன் ஆலயம், புத்தளம்

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் கன்னியாகுமரி மாவட்டத்தில் புத்தளம் பெத்தேல் லுத்தரன் ஆலயத்தில் 30.10.2016 அன்று நமது பீல் சுதேச ஊழியர் மடியா பாரியா அவர்களுடைய பிரதிஷ்டை ஆராதனை நடைபெற்றது. இந்த ஊழியரை தாங்கும் சகோதரர் டேவிட்ராஜ் அவர்களும் இந்த ஆராதனையில் கலந்து கொண்டார்கள். மேலும் நமது ஷாலோம் முன்னேற்றப் பணியாளர் சகோ. செல்வதுரை அவர்கள் தேவசெய்தி கொடுத்தார்கள். சகோ. சாம் குணசீலன் அவர்கள் ஊழியத்தை குறித்து பகிர்ந்துகொண்டார்கள், இதில் நமது நாகர்கோவில் கிளை அலுவலக ஊழியர்கள் அனைவரும் கலந்துக் கொண்டார்கள். இதற்கு வாய்ப்பளித்த போதகர் அழகேசன் அவர்களுக்கும், இந்த சுதேச ஊழியரை தாங்க முன்வந்த சகோதரர் டேவிட் ராஜ் அவர்கள் குடும்பத்தாருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# ராக்காலம் பெத்லேம் மேய்ப்பர்கள்

## கிறிஸ்துமஸ் பாடல்

லூக்கா 2:8–16

பாடல் : நாகூம் டேட்
ராகம் : ஜார்ஜ் F. ஹேண்டல்

1. ராக்காலம் பெத்லேம் மேய்ப்பர்கள்
தம் மந்தை காத்தனர்;
கர்த்தாவின் தூதன் இறங்க,
விண்ஜோதி கண்டனர்.

2. அவர்கள் அச்சங்கொள்ளவும்
விண்தூதன்: ''திகில் ஏன்?
எல்லாருக்கும் சந்தோஷமாம்
நற்செய்தி கூறுவேன்.''

3. ''தாவீதின் வம்சம் ஊரிலும்
மெய் கிறிஸ்து நாதனார்
பூலோகத்தார்க்கு ரட்சகர்
இன்றைக்குப் பிறந்தார்.''

4. ''இதுங்கள் அடையாளமாம்,
முன்னணை மீது நீர்
கந்தை பொதிந்த கோலமாய்
அப்பாலனைக் காண்பீர்.''

5. என்றுரைத்தான்; அஷணமே
விண்ணோராம் கூட்டத்தார்
அத்தூதனோடு தோன்றியே
கர்த்தாவைப் போற்றினார்.

6. ''மா உன்னதத்தில் ஆண்டவா,
நீர் மேன்மை அடைவீர்;
பூமியில் சமாதானமும்
நல்லோர்க்கு ஈகுவீர்.''

---

"கர்த்தருடைய மகிமை மேய்ப்பர்களைச் சுற்றிலும் பிராகாசித்தது"

---

புரோடெஸ்டென்ட் கிறிஸ்தவ சபை உருவான 16–ம் நூற்றாண்டிருந்து 18–ம் நூற்றாண்டு வரை, திருச்சபையின் பாடல்கள் அனைத்தும் ''ஸ்டெர்ன்ஹோல்ட் ஹாப்கின்ஸ் சால்ட்டர்'' என்ற சங்கீதங்களின் அமைப்பில் பாடப்பட்டன. இப்பாடல்கள் கரடுமுரடான அமைப்பாக இருந்ததால், அவற்றைப் பாடுவது கடினமாக இருந்தது. எனவே, சங்கீதங்களை நவீன முறையில் மாற்றியமைத்து, எளிதில் பாடும்படி அமைக்க, 1696–ம் ஆண்டு, இங்கிலாந்தின் அரசவைக் கவிஞர்களான நாகூம்டேட்டும், நிக்கோலஸ் பிராடியும் முயற்சி எடுத்தனர்.

கடும் எதிர்ப்புகள் மத்தியில், வில்யம் அரசனின் ஆதரவுடன், இப்புதிய அமைப்பு சங்கீதங்கள் இங்கிலாந்து திருச்சபையில் உபயோகப்படுத்தப்பட்டன. இதைத் தொடர்ந்து, 1700–ம் ஆண்டு, சங்கீதங்களின் மற்றொரு துணைத் தொகுப்பையும் வெளியிட்டனர். இத்தொகுப்பில், சங்கீதங்களைத் தவிர, 16 பாடல்களையும் அறிமுகம் செய்தனர். இவற்றில் இப்பாடலும் ஒன்று.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள வேத பகுதியில் வரும், ''தேவ தூதர்கள் மேய்ப்பர்களுக்கு இயேசு பிறந்த நற்செய்தியை அறிவிக்கும் சம்பவத்தை'', எளிய நடையில் கிறிஸ்மஸ் கீதமாக இப்பாடல் எழுதினார்கள். மற்றப் பாடல்களனைத்தும் காலத்தினால் அழிக்கப்பட்டுப் போயினும், இந்த கிறிஸ்மஸ் பாடல், பல நூற்றாண்டுகளாக, கிறிஸ்மஸ் தரும் உண்மையான மகிழ்ச்சியை சுட்டிக் காட்டும் பாடலாக விளங்குகிறது.

நாகூம் டேட் 1652–ம் ஆண்டு, அயர்லாந்தைச் சேர்ந்த டப்ளினில் வாழ்ந்த போதகரின் மகனாகப் பிறந்தார். லண்டனின் திருத்துவ இசைக் கல்லூரியில் படித்துத் தேறினார். 1690–ம் ஆண்டு, ''இங்கிலாந்து தேசப் புலவர்'', என்ற சிறப்புப் பட்டமும் பெற்றார். ஆனால், அவரது குடிப்பழக்கமும், ஊதாரித்தனமான செயல்களும் அவரது வாழ்வைக் கெடுத்தன. இறுதியில், 1715–ம் ஆண்டு லண்டனில், ஒரு கடன்பட்டோரின் அகதி இல்லத்தில், பரிதாபமாக மரித்தார். அவருடைய உற்ற நண்பரான பிராடியோ, தன் வாழ்நாள் முழுவதும், போதகராக, ஆண்டவருக்குச் சேவை செய்தார். இப்பாடலுக்கு, புகழ்பெற்ற ஜார்ஜ் F. ஹேண்டல் அமைத்த ராகத்தை, ''கிறிஸ்மஸ்'' என்ற தலைப்பில் இணைத்தனர்.

# பணித்தள நிகழ்வுகள்

**ஷாலோம் மிஷன் ஞாயிறு :**

ஷாலோம் மிஷன் ஞாயிறு 3 மாநிலங்களில் உள்ள அனைத்து சபைகளிலும் 25.09.16; 2.10.2016 09.10.2016 ஆகிய நாட்களில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. தேவன் பேராயர். தேவதாஸ் அவர்களுக்கு கொடுத்த பரம தரிசனமாக சொந்த பீல் ஜனங்கள் இரட்சிக்கப்படவும், ஷாலோம் ஊழியங்களுக்காக தேவனுக்கு துதி செலுத்தி ஒரு நாள் காணிக்கை மிஷனெரிப் பணிக்காக கவர் காணிக்கைகளாக அர்ப்பணித்தார்கள். இந்த வருடம் ஊழியத்திற்கு தேவையான ரூ.500 இலட்சங்களை சந்திக்க பீல் விசுவாசிகள் சபையாக சுமார் ரூ. 35 இலட்சங்களை காணிக்கையாக வழங்கினார்கள். மேலும் 1000 சுதேச ஊழியர்கள் 1000 கிராம சபைகள் என்று எழுப்பவும் ஒவ்வொரு விசுவாசிகளும் 3 குடும்பங்களை தேவனண்டை இந்த வருடம் வழிநடத்தவும் அர்ப்பணித்தார்கள். தேவனுக்கே மகிமை !

**ஷாலோம் சுசேத ஊழியர்கள் குடும்ப ஆசீர்வாத முகாம் :**

தேவகிருபையால் அக்டோபர் 18 முதல் 21 வரை குஜராத்தில் பரூச் நகரில் உள்ள Christian Spiritual Life Centre ல் 2016 ஆம் ஆண்டிற்கான சுதேச ஊழியர்கள் முகாம் வெகு சிறப்பாக நடைபெற்றது. இந்த முகாமில் விசேஷமாக 25 வருட வெள்ளி விழா சிறப்பு கூடுகையாக நடைபெற தேவன் கிருபை தந்தார். அன்பு சகோ. மோகன்.சி. லாசரஸ்( இயேசு விடுவிக்கிறார் நாலுமாவடி) அவர்கள் சிறப்பாக வருகை தந்து செய்திகளை அளித்தார்கள்.

152 போதகர்கள் மற்றும் உதவி பேராயர்(மத்தியப்பிரதேசம்) பிரதிஷ்டை தேவனுடைய கிருபையிலும் பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலின்படியாக ஷாலோம் திருச்சபைகளின் 152 சுதேச ஊழியர்கள் போதகர்களாக பிரதிஷ்டை செய்யப்பட்டார்கள். மேலும் மத்தியப்பிரதேசத்தில் உள்ள 300 திருச்சபைகள் ஒருங்கிணைக்கப்பட்டு திருமண்டலங்களாக துவக்கப்பட்டு போதகர். பால் முனியா அவர்கள் உதவி பேராயராக அபிஷேகம் பண்ணப்பட்டார்கள். Anglican Churches Moderator Most Rev. John Sathiyakumar அவர்கள் சிறப்பாக நடத்தி தந்தார்கள்.

**சகோ. மோகன்.சி. லாசராஸ் அவர்கள் பணித்தள வருகை :**

இந்த ஆண்டு சகோ. மோகன்.சி. லாசராஸ் அவர்கள் இயேசு விடுவிக்கிறார் குழுவாக பணித்தளத்தில் 22 - 25 அக்டோபர் 2016, நாட்களில் வந்தது மிக்க மகிழ்ச்சியான ஊழியமாக அமைந்தது. 5 கிராம ஆலயங்கள் பிரதிஷ்டை; ஷாலோம் பவன் (குஜராத்) ஷாலோம் பேராலயம் ( அந்தர்வேலியா, மத்தியப்பிரதேசம்) ஷாலோம் மிஷன் பள்ளி மற்றும் விடுதி ( சத்திரக்கூட்டா, இராஜஸ்தான்) ஆகிய 3 வெள்ளிவிழா திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

மேலும், ஷாலோம் மருத்துவ முகாம்; மத்தியப்பிரதேச ஷாலோம் சபை மூப்பர்கள் முகாம்; இராஜஸ்தான் ஷாலோம் மூப்பர்கள் மற்றும் வாலிபர்கள்

முகாம்; பணித்தள அலுவலக ஊழியர்கள் சிறப்பு கூடுகை மற்றும் சில ஆசீர்வாத மான நிகழ்ச்சிகள் நடைபெற தேவன் கிருபை தந்தார். மேலும்; நம் ஷாலோம் ஊழியத்தில் செயற்குழு உறுப்பினர்கள், ஊழிய ஆதரவாள அன்பர்கள்; ஷாலோம் அலுவலக உறுப்பினர்கள் பங்கு பெற்றது குறிப்பிடத்தக்கது.

**ஷாலோம் சிறுவர்கள் முகாம் :**

தேவ கிருபையால் நவம்பர் மாதம் குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தானில் உள்ள ஷாலோம் சபைகளை பகுதி வாரியாக ஒருங்கிணைத்து சிறுவர்கள் முகாம் நடத்தப்பட்டது. சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்கள் தலைமையில் 3 குழுவாக பயிற்சி கொடுக்கப்பட்டு பயிற்சி பெற்ற குழுவினர்கள் 3 மாநிலங்களிலும் 25 முகாம்களை நடத்த தேவன் கிருபை செய்தார். சுமார் 3000 பீல் ஆதிவாசி சிறுவர்கள் இயேசுவை ஏற்றுக் கொண்டார்கள், விடுதலை பெற்றார்கள், அபிஷேகம் பெற்றார்கள்.

**ஆலயங்கள் சந்திப்பு ஊழியம் :**

கடந்த நவம்பர் மாதம் சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் குழுவாக இராஜஸ்தான் மாநிலத்தில் கட்டப்பட்ட 4 ஷாலோம் ஆலயங்களை நேரில் சென்று பார்த்து சபையாருடன் ஜெபிக்க தேவன் கிருபை தந்தார். அந்தந்த பிராந்தியங்களில் தேவன் மிகப் பெரிய எழுப்புதலைக் கட்டளையிட்டுள்ளார்.

**வாலிபர் கூடுகை, நியூடெல்லி :**

அக்டோபர் 26 முதல் 30 வரை டில்லியில் விஷன் இந்தியா மூலமாக ஒழுங்கு செய்யப்பட்டு International Youth Conference-ல் இந்தியா மற்றும் அண்டைய நாடுகளிலிருந்து சுமார் 6000 பேர்கள் பங்கு பெற்றார்கள். டாக்டர் பால் தினகரன்; சகோ. மோகன் சி. லாசரஸ் உள்பட அநேக சுவிசேஷகர்கள், மூத்த போதகர்கள் ஆராதனை நடத்தும் தலைவர்களாக செய்தி அளித்தார்கள். வடஇந்தியாவில் நிச்சயமாக தேவன் வாலிபர்களை ஆயிரமாயிரமாக அபிஷேகித்து எழுப்புதலை அனுப்பியுள்ளார். நம்முடைய ஷாலோம் ஊழியத்திலிருந்து 200 வாலிபர் மற்றும் ஊழியர்கள் பங்கு பெற்றார்கள். பேராயர் தேவதாஸ் அவர்களும் (ஊழிய அழைப்பின் செய்தியை) ஊழிய அனுபவத்தைப் பகிர்ந்துக் கொண்டார்கள். மேலும் போதகர்களுக்காக நடைபெற்ற முகாமில் "அப்போஸ்தலன் பவுல் போல் ஊழியம் செய்ய" செய்தியை பகிர்ந்து ஜெபித்த வேளையில் வடஇந்திய போதகர்கள் மத்தியில் விசேஷ அபிஷேகத்தை ஊற்றினார். இந்த முகாமை ஒழுங்கு செய்த ஊழியர் அவர்களுக்காகவும், குறிப்பாக பாஸ்டர் விஜய் மோகன் (விஷன் இந்தியா, நாக்பூர் ) அவர்களுக்காக தேவனைத் துதிப்போம்.



**நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்;**
**நமக்கு ஒரு குமாரன்**
**கொடுக்கப்பட்டார்.**
ஏசாயா 9:6



# வெளிச்சத்திலே வெளிச்சம்

## உம்முடைய வெளிச்சத்திலே வெளிச்சம் காண்கிறோம். சங். 36:9



கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே!

தேவனாகிய கர்த்தர் அன்பு பகிர்வு இயக்கத்தை உருவாக்கி 25 ஆண்டுகள் நிறைவாகிட வெள்ளிவிழாவைக் கொண்டாட கிருபை செய்ததற்காய் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன். தேவனாகிய கர்த்தர் **பிஷப் தேவதாஸ்** அவர்களுக்கும், அவர்களது மனைவி **வஹிதா தேவதாஸ்** அவர்களுக்கும் ஒரு கோடி பீல் ஜாதி மக்களை மீட்டெடுக்கும் தரிசனத்தைத் தந்து, ஷாலோம் ஸ்தாபனத்தை அவர்கள் மூலமாக ஸ்தாபித்து 25 ஆண்டுகளாக வெற்றியாக வழிநடத்தி, அவருடைய மகிமையின் வெளிச்சத்தைப் பீல் ஜாதி மக்களிடையே உதிக்கச் செய்து பிரகாசிப்பதை இந்த வெள்ளி விழாவிலே காண கிருபை செய்தார்.

இந்த வெள்ளி விழாவிலே **சகோ. மோகன் சி. லாசரஸ்** அவர்களும், இயேசு விடுவிக்கிறார் குழுவினரும், பேராயர்கள், போதகர்கள் மற்றும் அடியேனும் என் மனைவி திருமதி டாக்டர் பிரேமா கிறிஸ்டோபர் அவர்களும் பங்கு பெற கர்த்தர் கிருபை செய்தார். நாங்கள் தங்கி இருந்த நாட்களில் அங்கு பரூச் நகரில் நடந்த அன்பு பகிர்வு இயக்கக் கூடுகையில், ஏறத்தாழ 2000 பீல் ஊழியர்கள் குடும்பமாக கூடி இருந்தனர். 25 ஆண்டுகளுக்கு முன்பு இருளிலே இருந்த அம்மக்கள் மீது இயேசு கிறிஸ்துவின் ஜீவ ஒளி பாய்ந்து அவர்களைப் பிரகாசிக்க வைத்தது.

அம்மக்கள் இரட்சிப்பின் வெளிச்சத்தைப் பெற்றிருப்பதை அவர்கள் பாடல்கள், கர்த்தரை ஆராதித்த முறைகள், பரிசுத்த ஆவியின் அபிஷேகம் அனைத்தையும் கண்டு மிகுந்த பரவசமடைந்தோம். அவர்களுக்குள் காணப்படும் விசுவாசம், மகிழ்ச்சி, சமாதானம் அனைத்தையும் கண்டு அனைவரும் வியப்படைந்தோம். அந்தக் கர்த்தருடைய வெளிச்சத்தின் மகிமையைக் கண்ட எங்களுக்குப் பூரிப்பைத் தந்தது.

அடுத்த நாள் 150 மிஷனெரிமார்களின் குருத்துவ அபிஷேக ஆராதனையும், ஒரு துணைப் பேராயர் அபிஷேக ஆராதனையும் நடைபெற்றது. அப்பொழுது வெண் வஸ்திரங்களைத் தரித்து ஆயிரக்கணக்காக கூடியிருந்த மக்






களிடையே தேவப் பிரசன்னம் இறங்கி, அவருடைய மகிமையின் வல்லமை வெளிப்பட்டதைக் கண்டு, பரலோக பாக்கியத்தின் மகிழ்ச்சியை உணரச் செய்தது.

அடுத்து தாகோத்திலுள்ள ஷேரன் மிஷன் மருத்துவமனையில் இலவச மருத்துவ முகாம் நடந்தது. அதில் என் மனைவி டாக்டர் பிரேமா கிறிஸ்டோபர் அவர்களும், மற்றும் மூன்று மருத்துவர்களும் இணைந்து அம்முகாமிலே பங்கு பெற்று வந்த பிணியாளிகள் அனைவருக்கும் கர்த்தருடைய ஆலோசனை, அன்பு, மருத்துவ சிகிச்சைகளைத் தந்து சிறப்பாக நடத்தினர். கர்த்தருடைய நாமம் மகிமைப்பட்டது.

அடுத்து, இராஜஸ்தானில் அம்மக்களுக்காக கல்வி நிலையம் கட்டுவதற்காக அடிக்கல் நாட்டப்பட்டது. **சகோ. மோகன் சி. லாசரஸ்** அவர்கள் அங்கு கூடியிருந்த ஆயிரக்கணக்கான மாணவர்கள் மத்தியிலே கர்த்தருடைய செய்தியை வழங்கினார்கள் . நானும் எழும்பு எழும்பு சீயோனே! உன் வல்லமையைத் தரித்துக் கொள் என்ற வாக்குத்தத்தத்தைக் கொண்டு அம்மாணவர்களை வாழ்த்த கர்த்தர் அருள் புரிந்தார். நானும் என் மனைவி டாக்டர் பிரேமா கிறிஸ்டோபர் அவர்களும், அவர்களோடு ஜெபித்து கற்களை நாட்ட கர்த்தர் கிருபை செய்தார். இந்த அனுபவம் குட்டிப் பரலோக அனுபவமாய் இருந்தது. இதைச் சிறப்பாய் ஒழுங்கு செய்த பேராயர் தேவதாஸ் அவர்களுக்கும், அவர்களது மனைவி திருமதி **வஹிதா தேவதாஸ்** அவர்களுக்கும் ஷாலோம் அங்கத்தினர் அனைவருக்கும் எங்கள் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். இதைப் படிக்கிற நீங்கள் இவ்வூழியத்திற்காக ஜெபிக்கவும், உற்சாகமாய் தாங்கவும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் மகிமையும், கனமும், ஸ்தோத்திரமும் தேவனாகிய கர்த்தர் ஒருவருக்கே உண்டாவதாக!

இப்படிக்கு,
கிறிஸ்துவின் பணியில்,
Prof. C.S. Christopher.

# டிசம்பர் மாத ஷாலோம் ஜெபங்கள்

| நாள் | நேரம் | இடம் | தேவசெய்தி மற்றும் தொடர்புக்கு |
|---|---|---|---|
| 01.12.2016<br>(வியாழக்கிழமை) | காலை 9.15 முதல்<br>1.00 மணி | அன்பு பகிர்வு இயக்கம் தலைமை அலுவலகம்<br>No. 5A/323, கால்டுவெல் காலனி 3வது தெரு,<br>**தூத்துக்குடி**-628 008. | **Prof.C.S. கிறிஸ்டோபர்,**<br>பாளையங்கோட்டை |
| 10.12.2016<br>**சனிக்கிழமை** | மாலை 5.00<br>மணிக்கு | M.T.N பில்டிங்<br>(மகளிர் காவல் நிலையம் அருகில்)<br>வடக்குத் தெரு, **மார்த்தாண்டம்** | சகோ. **செல்வதுரை,**<br>செல் : 9487689869 |
| 10.12.2016<br>சனிக்கிழமை | காலை 10.00மணி<br>முதல் 1.00 வரை | உபவாச ஜெபம் தலைமை அலுவலகம்<br>**தூத்துக்குடி** | சகோ. **சாம் குணசீலன்,**<br>செல் : 9345675468 |
| 12.12.2016<br>திங்கள்கிழமை | காலை 10.00மணி<br>முதல் 1.00 வரை | ஷாலோம் பெண்கள் ஜெபக் கூடுகை<br>தலைமை அலுவலகம், **தூத்துக்குடி** | செல் : 9688744522 |
| 17.12.2016<br>சனிக்கிழமை | காலை 10.00மணி<br>முதல் 1.00 வரை | சகோ. செல்வதாஸ் (சிறப்பு செய்தியாளர்)<br>எபனேசர் பிளாசா, பரமா தெரு ஜங்சன்,<br>**நாகர்கோவில்.** | சகோ. **ராபின்சன்**<br>செல் : 9688144522 |
| 17.12.2016<br>**சனிக்கிழமை** | காலை 10.00மணி<br>முதல் 1.00 வரை | எஸ்தர் பெண்கள் ஜெபக்குழு கூட்டம்<br>தலைமை அலுவலகம், **தூத்துக்குடி** | செல் : 9688744522 |
| 17.12.2016<br>**சனிக்கிழமை** | மாலை 5.30 மணி<br>முதல்9.00மணிவரை | அற்புதராஜ் மெட்ரிக்குலேஷன் பள்ளி<br>நுங்கம்பாக்கம் இரயில் நிலையம் அருகில், **சென்னை** | **சகோ.ஜான் ஜெயசிங்,**<br>செல் : 96982 44577 |
| 24.12.2016<br>**சனிக்கிழமை** | காலை 12.00 மணி<br>முதல்12.00மணிவரை | ஷாலோம் சங்கிலி தொடர் ஜெபம்<br>தலைமை அலுவலகம் | செல் : 9688744522 |




பிரியமானவர்களே
**நமது ஷாலோமின் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை**
கீழ்கானும் தொலைக்காட்சி சேனல்களிலும் கண்டு தேவனைத் துதியுங்கள்

| | |
|---|---|
| ஹெவன் Heaven tv | ***நாகர்கோவில் – ஞாயிற்றுக்கிழமை*** <br> மாலை 5.00 மணி முதல் 5.30 வரை |
| ARK T.V. | ***நாகர்கோவில் – திங்கள் கிழமை*** <br> மாலை 9.30 மணி முதல் 10.00 வரை |
| ஹெவன் Heaven tv India | ***சென்னை – ஞாயிற்றுக்கிழமை*** <br> மாலை 5.00 மணி முதல் 5.30 வரை |
| HOPE T.V. | ***தூத்துக்குடி – ஞாயிற்றுக்கிழமை*** <br> மாலை 5.00 மணி முதல் 5.30 வரை |
| CROSS T.V. | ***தூத்துக்குடி – புதன் கிழமை*** <br> காலை 7.30 மணி முதல் 8.00 வரை |

**ஷாலோம் ஆதரவாளர்களுக்கு ஓர் அறிவிப்பு**

அன்புள்ள ஷாலோம் ஆதரவாளர்களுக்கு, இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்! குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் ஆகிய 3 மாநிலங்களில் வாழும் பீல் ஆதிவாசி சிறுவர்களுக்கு உணவு, உடை, உறைவிடத்துடன் கல்வி மற்றும் உயர்கல்வியினை அளித்து அவர்கள் சமுதாயத்தில் முன்னேறப் பாடுபடுவதோடு, பீல் ஆதிவாசி ஜனங்களுக்கு இலவச மருத்துவச் சேவை மற்றும் இதர சமுதாய முன்னேற்றப் பணிகளை நிறைவேற்றிவரும் Shalom Charity Mission க்கு அரசாங்கத்திடமிருந்து வருமான வரிவிலக்குச் சான்று (80G) கிடைக்கப் பெற்றுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம். சமுதாய முன்னேற்றப் பணி, பீல் ஆதிவாசி சிறுவர் முன்னேற்றப்பணி, மற்றும் மருத்துவ பணிக்குக் காணிக்கை அனுப்பும் ஆதரவாளர்கள் இந்த வருமான வரிவிலக்கினை கேட்டுப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.



# ஷாலோம் ஊழியத்திற்கான உங்கள் பங்கினை இந்த வருடம் அனுப்பிவிட்டீர்களா?

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!

உங்கள் கரங்களில் கிடைக்கும் அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலர் ஆத்துமப் பாரத்துடன் வட இந்தியாவில் தேவன் தந்த தரிசனப் பணியான மிஷனெரிப் பணித்தளச் செய்திகளையும், தேவனுடைய வார்த்தைகளையும், ஜீவனுள்ள சாட்சிகளையும், மிஷனெரி வாழ்க்கை வரலாறுகளையும் மற்றும் ஆவியானவரால் கொடுக்கப்படும் காரியங்களையும் சுமந்து வருகிறது. இம்மலருக்காக அதிகமாக ஜெபித்து, உழைத்து, அநேகச் செலவுகளைச் செய்து அனுப்புகிறோம்.

இந்த தரிசனப்பணியை, தேவன் பேரில் கொண்ட அன்பின் நிமித்தமாக, தியாகத்துடனும், ஆத்துமப் பாரத்துடனும் மாதந்தோறும் / வருடந்தோறும் தாங்கி வரும் ஆதரவாளர்களுக்காகத் தேவனைத் துதிக்கிறேன். இப்படி ஜெபித்து, ஊழியங்களைத் தாங்கிவரும் ஆதரவாளர்கள் மாதந்தோறும் ஊழியங்களை அறிந்து தேவனைத் துதிக்கவும், மேலும் பாரத்துடன் ஜெபிக்கவும் இம்மலர் அனுப்பப்படுகிறது. ஆனால் அநேகர் இந்த ஊழியத்திற்காகவோ, இந்த பத்திரிகைகளுக்காகவோ வருடத்திற்கு ஒரு முறை கூட காணிக்கை அனுப்பவில்லை.

பீல் ஆதிவாசி மக்களின் மத்தியில் நடைபெறும் மிஷனெரி ஊழியங்களுக்காக செலவு செய்யப்படும் இப்பணிக்காக, இம்மலரை வாசிக்கும் அன்பர்கள் இந்த வருடத்தில் ஒரு முறை கூட காணிக்கை அனுப்பவில்லையெனில், தயவாக உங்கள் அன்பின் பங்கினை ஜெபித்து அனுப்பி, ஊழியங்களைத் தாங்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அல்லது குறைந்தது பத்திரிகை வருடச்சந்தா காணிக்கையான ரூ. 100/– ஐ அனுப்ப வேண்டுகிறோம்.

அப்படியாக நீங்கள் வருடத்திற்கு ஒருமுறை, குறிப்பாக இந்த மாதத்திற்குள்ளாக காணிக்கை அனுப்பும்படி அன்புடன் கேட்கிறோம். **“அப்படி நீங்கள் காணிக்கை அனுப்பாத பட்சத்தில், நிதி நெருக்கடியின் காரணத்தினால் எங்களால் தங்களுக்கு பத்திரிகை அனுப்ப இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்”.**

நீங்கள் அனுப்பும் தியாகமான காணிக்கையை நாங்கள் வரவேற்கிறோம், உங்கள் குடும்பத்தையும், சந்ததியையும் தொடர்ந்து தேவன் ஆசீர்வதிப்பாராக





# ஞாபகப்படுத்துகிறோம்...

## (கிறிஸ்துமஸ் பண்டிகைக்காக)

### அன்பான உண்டியல் ஆதரவாளர்களே...!

அன்பின் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்! கிறிஸ்துமஸ் பண்டிகை தினத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் நாம், வரப்போகின்ற கிறிஸ்துமஸைக் கொண்டாட ஜெபித்து இப்பொழுதே ஆயத்தப்படுவது நமது கடமையாகும். கிறிஸ்துமஸ் நாளுக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்ற வாஞ்சையோடு, நீங்கள் எங்களிடமிருந்து பெற்றுக் கொண்ட உண்டியலில் அந்த ஆதிவாசிப் பிள்ளைகளுக்கென காணிக்கைகளை சேகரித்து வைத்திருப்பீர்கள் என்று விசுவாசிக்கிறோம். இந்தக் காணிக்கையை ஆதிவாசிப் பிள்ளைகளின் கிறிஸ்துமஸ் தேவைகளுக்காகக் கொடுப்பீர்கள் என்று நம்புகிறோம். அதோடு பீல் ஆதிவாசிப் பிள்ளைகளுக்காக அனுதினமும் ஜெபிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். நாங்கள் உங்களுக்காகவும், உங்களுடைய குடும்பத்திற்காகவும் அனுதினமும் ஜெபிக்கிறோம். நீங்கள் பீல் ஆதிவாசிப் பிள்ளைகளுக்காகக் கொடுக்கும் தொகையை எங்கள் ஊழியர் அல்லது பிரதிநிதிகள் மூலமாகக் கொடுக்கலாம். அல்லது எங்களது தலைமை அலுவலகத்திற்கு நேரில் வந்தும் கொடுக்கலாம். அல்லது உண்டியலைத் திறந்து எடுத்து **M.O / D.D / Cheque** மூலமாக **SHALOM CHARITY MISSION** என்ற பெயருக்கு தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்களின் தெளிவான முகவரியுடன், உண்டியலின் எண்ணையும் எழுதி அனுப்ப மிக அன்போடு கேட்கிறோம். நீங்கள் உண்டியலைத் திறக்க உங்களுக்கு சாவி **(Key)** வேண்டுமானால் **9698944522** என்ற செல் நம்பருக்குத் தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்கு சாவியை **(Key)** அனுப்பி வைக்கிறோம்.




தாங்களும் பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்காக காணிக்கைகளை கொடுத்து கர்த்தரிடத்தில் இருந்து ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்வோமாக.

## உங்களுக்காக ஜெபிக்கிறோம்

அன்பான ஆதரவாளர்களே உங்களுக்காகவும் உங்களது குடும்பத்திற்காகவும் நாங்கள் தொடர்ந்து ஜெபித்து வருகிறோம். மேலும் உங்களது ஜெபக்குறிப்புகளை அன்பு பகிர்வு இயக்கம் தலைமை அலுவலகத்திற்கு கடிதம் மூலமாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ தொரியப்படுத்தினால் நாங்கள் உங்களுக்காக விசேஷமாக ஜெபிக்க ஆயத்தமாயிருக்கிறோம்

## காணிக்கைகளை அனுப்பும் வழிகள்

- **தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்துக் கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.**
- **உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதைப் பெற்றுக் கொள்ளுங்கள்.**
- **காணிக்கைகளை** E.M.O. **மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பும்போது கிளை (சிதம்பரநகர்) என்று குறிப்பிட்டு அனுப்பவும். அவ்வாறு அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியைக் கொடுக்கும்படி தயவாய் கேட்டுக் கொள்கிறோம்.**
- SHARING LOVE MISSION **என்ற பெயருக்கு** D.D. **அல்லது** Cheque **எடுத்து தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு பதிவு தபால் அல்லது கொரியர் மூலமாக உங்கள் காணிக்கைகளை அனுப்பலாம்.**
- **உங்களது வங்கிக் கணக்கிலிருந்து,** Net Transfer **மூலமாகவும் காணிக்கைகளை கீழ்க்கண்ட எங்களது வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பலாம்.**
- **நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க்கண்ட வங்கிகளில் எங்கள் கணக்குகளில்** Cash (or) Cheque (or) D.D. **மூலம்** Deposit **பண்ணலாம்.**
- **எங்களது ஷாலோம் கிளை அலுவலகங்களுக்கு நேரடியாக வந்தும் காணிக்கைகளைக் கொடுத்து ஜெபித்துச் செல்லலாம்.**

---

**வங்கிக் கணக்கின் பெயர்** : **Sharing Love Mission**

Branch : Tuticorin. **கிளை** : **தூத்துக்குடி**

---

**Tamilnad Mercantile Bank**
**A/c. No. : 106100710400009 (I F S Code : TMBL0000106)**

---

AXIS BANK **A/c. No. : 105010100094373**
**(IFS Code : UTIB0000105)**

---

**நீங்கள் ஷாலோம் ஊழியங்களுக்கு வங்கிக் கணக்குகளில்** Cash (or) Cheque (or) D.D. **மூலமாகவோ அல்லது** Net Transfer **மூலமாகவோ காணிக்கை செலுத்தினால், உடனடியாக அந்தத் தகவலை எங்களுக்குத் தெரியப்படுத்த அன்பாய்க் கேட்கிறோம். அப்படி தெரியப்படுத்தாத பட்சத்தில் எங்களுக்கு யார் காணிக்கை அனுப்பியது என்று தெரியாமல் போய்விட வாய்ப்பு உள்ளது. ஆகவே ஆதரவாளர்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தாங்கள் காணிக்கை செலுத்திய விபரத்தினை** e-mail, Phone, SMS, Whats app **மூலமாக எங்களுக்குத் தெரிவியுங்கள். தொடர்புக்கு** : 93456 75468

## உங்கள் ஜெப உதவிக்கு ஷாலோம் கிளை அலுவலகங்களின் முகவரிகள்

**HEAD OFFICE** **SHARING LOVE MISSION, Bro. Sam Gunaseelan**

No. 5A/323,-3rd Street, Caldwell Colony, TUTICORIN-628008
Ph. : 2377737, 2375468, Cell : 9345675468

**CHENNAI BRANCH OFFICE**

**Bro. John Jeyasingh** No.102-2nd Main Road Sathya Nagar, Padi, CHENNAI - 600050,Cell : 9698244577

**NAGERCOIL BRANCH OFFICE** **Bro. Robinson. S.**

Ebenezer Plaza, Parama Street, WCC Junction,Nagercoil - 629001
Cell : 9688144522, 9698444522

**MARTHANDAM BRANCH OFFICE** **Bro. Selvadurai.G**

M.T.N. Building, North Street, Near Women's Police Station,
Marthandam, K.K. Dist. - 629165, Cell : 9487689869, 9659644500

**MADURAI BRANCH OFFICE** **Bro. Chandra Paul. S**

6/3, Nellaiappar Puram 7th Street,Tirunagar (p.o)
MADURAI-625006, Cell : 9698644522

**TIRUNELVELI BRANCH OFFICE** **Bro. David. R**

56 A/4,-C.S.I Church South Street, (Upstairs) STC road, Perumalpuram,
Palayamkottai TIRUNELVELI-627007, Cell 9698844599

**MUMBAI BRANCH OFFICE** **Bro. Jacob. N.**

Bathani Bhavan, Room No. 11, First Floor, R. No. 2, Gate No. 6,
Malvani, Malad West, Mumbai - 400095,Cell : 09819554974

**COIMBATORE BRANCH OFFICE** **Mr.Yardli Vinodh.J**

No: 31 LakshumiGarden, Palaya Pudur, Periyanayakkan palayam,
Coimbatore -641020, Cell : 9698144522

**குழந்தை ஆதரவுத் தொகை மற்றும் சமுதாயப்பணி காணிக்கைகளை அனுப்ப...**

**SHALOM CHARITY MISSION**

Branch : Tuticorin,

AXIS BANK
Branch : Tuticorin,
**10501010096779 -**
(IFS Code : UTIB0000105)

**Tamilnad Mercantile Bank**
**174100710400061**
(IFS Code : TMBL0000174)
**Branch : Tiruchendur Road**

## நாட்டு நடப்புச் செய்திகள்

**நீலகிரியில் பெய்த மழையால் வரலாறு காணாத சேதம்** 11.11.2016

நீலகிரியில் பெய்த பலத்த மழையால் வரலாறு காணாத சேதம் ஏற்பட்டது. பல்வேறு இடங்களில் மண்சரிவு காரணமாக வீடுகள் தரைமட்டமாயின. சாலைகள் துண்டிக்கப்பட்டதால் வாகன போக்குவரத்து அடியோடு பாதிக்கப்பட்டது. தண்டவாளம் சேதம் அடைந்ததால் மலை ரயில்போக்குவரத்தும் நிறுத்தப்பட்டது. நீலகிரி மாவட்டத்தில் மொத்தம் 543 இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் 816 வீடுகள் இடிந்து மண்ணில் புதைந்தன. இதில் சிக்கி 43 பேர் உயிர் இழந்தனர். 1100 பேர் வீடுகளை இழந்துள்ளனர். 600 ஹெக்டேர் நிலத்தில் பயிர்கள் முழுமையாக அழிந்து விட்டன. மறு சீரமைப்பு பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

**உலகெங்கிலும் மாவீரர் தின அஞ்சலி** 11.11.2016

விடுதலைப்புலிகள் ஈழப்போரில் இறந்த போராளிகளை நினைவு கூறுவது, மதிப்பது தமது அடிப்படைக் கடமைகளில் ஒன்றாகக் கருதுகிறார்கள். மாவீரர் நாளாக நவம்பர் 27-ஐ விடுதலைப் புலிகளால் 1989ல் அறிவிக்கப்பட்டது. அது முதல் மாவீரத் தினத்தில் கல்லறைக்கு அஞ்சலி செலுத்துவதும், கொடியேற்றுதல், ஈகைச்சுடரேற்றுதல், மலர்தூவி அஞ்சலி செய்தல் என்பன மாவீரர் நாளின் முக்கிய நிகழ்வுகளாக இடம் பெறுகின்றன. அதேபோல இவ்வாண்டும் உலகெங்கு வாழும் தமிழினமக்கள் இவ்வருட மாவீரர்கள் தினத்தில் சிங்கள அரசுக்கெதிராக வலிமையான யுத்தத்தை நடத்தி வீர மரணம் அடைந்த அனைவருக்கும் வீர வணக்கம் செலுத்தப்பட்டது.


**கீழ்கண்ட விலாசத்தில் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்**

| தலைமை அலுவலகம் | பணித்தள அலுவலகம் |
| --- | --- |
| **SHARING LOVE MISSION**<br>5A/323, Caldwell Colony,<br>3rd Street, Tuticorin - 628 008.<br>Tamil Nadu.<br>Phone : 0461-2375468, 2377737<br>Cell : 9345675468 | **Rt. Rev. Dr. V. DEVADASS**<br>Founder & General Secretary<br>Sharing Love Mission<br>Christian Kamdar Society,<br>Dahod - 389 151, Gujarat<br>Phone : 07043334501<br>Cell : 09377445468 |

**email : info@shalommission.in Website : www.shalommission.in**

# துவாதரா



துவாதரா என்ற கிராமம் மத்தியப்பிரதேசத்திலுள்ள ஜாபுவா மாவட்டத்தில் ராணாப்பூர் தாலுகாவில் அமைந்துள்ளது. இந்தக் கிராமத்தில் வாழும் மக்கள் சாராயம், பீடி, தம்பாக்கு போன்ற பாவங்களுக்கு அடிமையாகவும், மந்திரவாதம் மற்றும் விக்கிரக ஆராதனை செய்பவர்களாகவும் வாழ்பவர்கள். ஊழியர் மடியா டாமோர் அவர்களின் மனைவி பிசாசின் பிடியினால் பாதிக்கப்பட்டு, மிகவும் கஷ்டப்பட்டார்கள். சுகத்திற்காக எவ்வளவோ மந்திரம் மற்றும் மருத்துவம் பார்த்தும் எந்த பலனுமில்லை. இந்நிலையில் ஷாலோம் ஊழியர் ரமேஷ் M. வசுனியா அவர்கள் இயேசுவைப் பற்றிக் கூறி, இவருடைய மனைவிக்காக ஜெபித்த போது தேவன் பரிபூரண விடுதலையைக் கொடுத்தார். அந்த அற்புதத்தின் மூலம் குடும்பமாக இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார்கள்.

பின்பு 2011-ல் மடியா டாமோர் அவர்களின் வீட்டில் ஊழியர் ரமேஷ் M. வசுனியா அவர்கள் 4 பேருடன் கூட்டம் நடத்த ஆரம்பித்தார். ஆரம்ப நாட்களில் கூட்டம் நடத்துவதற்கு எதிர்ப்புகள் இருந்த போதிலும் சோர்ந்து போகாமல் உபவாசத்துடன் ஜெபித்ததில் தேவன் எதிர்ப்புகளை மாற்றிப் போட்டார். ஜம்னா பேன் என்ற சகோதரி வியாதியினால் பாதிக்கப்பட்டு மிகவும் கஷ்டப்பட்டார்கள். ஊழியர் மடியா டாமோர் அவர்கள் ஜெபித்ததில் தேவன் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். அந்த அற்புதத்தைக் கேள்விப்பட்டு, அநேக மக்கள் சபைக்கு வர ஆரம்பித்தார்கள். தற்போது 23 குடும்பங்கள் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு, சபையில் ஆராதித்து வருகிறார்கள்.

தற்போது ஊழியர் மடியா டாமோர் அவர்கள் காணிக்கையாக கொடுத்த சொந்த நிலத்தில், தேவ நாம மகிமைக்காக புதிய ஆலயம் கட்டப்பட்டு 06.11.2016 அன்று பேராயர் தேவதாஸ் அவர்கள் மற்றும் சகோ. நெல்லை G. சாமுவேல் அவர்கள் மூலம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. தேவனுக்கே மகிமை!

இந்த கிராம ஆலயம் சுரேஷ் J. பால் (மார்த்தாண்டம்) அவர்கள் குடும்பத்தின் சார்பில் வழங்கப்பட்ட நிதியுதவியின் மூலம் கட்டி முடிக்கப்பட்டது.

Registered with the Registrar of News Paper in India
Under No. TNTAM/2004/16449. Postal Regn. No. : TTN/07/2015-2017.
TN/WPP-95/SR/2015-2017, Date of Publication : 25th of every month.
Posted at Chidambaranagar P.O. 628008 on 25th & 28th of every month

# Christmas Greetings

*Christmas is the gentlest,*
*loveliest festival of the revolving year-*
*and yet, for all tyhat,*
*when it speaks,*
*its voice has strong authority*



## Merry Christmas

## கிறிஸ்துமஸ் நல் வாழ்த்துக்கள்

**By Rt. Rev. Dr. V. Devadass & Family**

Sharing Love Mission

Shalom Diocese In India

Shalom Charity Mission

Owned and Published by V. Devadass from New No.5A/323, Old.No. 5/168, Caldwell Colony, 3rd Street, Tuticorin - 628 008. and Printed by S. Joseph at Rajan Press, 59, Palayamkottai Road, Tuticorin-628 002. Editor : V. Devadass